கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(03.03.2019 - 03 பங்குனி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 203, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

திருநீற்றுப்புதன் 06.03.2019



கிறிஸ்தவ குடும்பங்களின் உரிமைகள் மதிக்கப்படவும், சித்திரவதைப்பட்டோர் கிறிஸ்துவை நெருக்கமாக உணரவும் செபிப்போம்.

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



# தவக்காலத்தை வீணாக்காமல் நோன்பு, செபம், தர்மம் செய்வோம்.

## தவக்காலத்திற்கான திருத்தந்தையின் செய்தி



1. பாவத்திற்காக மனம் வருந்துதல்,
2. மனமாற்றம்,
3. மன்னிப்பு

ஆகியவை வழியாக, கிறிஸ்தவர்கள், தங்கள் வாழ்வைப் புதுப்பிப்பதற்கு, தவக்காலம் வலியுறுத்-துகின்றது. இதன் வழியாகவே நாம் பாஸ்கா பேருண்மையின் அளவற்ற அருளை முழுமையாக வாழ முடியும். இந்த அருளின் காலம் வீணாய்ப் போகாதபடி, உண்மையான மனமாற்றத்தின் பாதையில் நாம் செல்வதற்கு கடவுளின் உதவியை நாடுவோம். தன்னலத்தைக் கைவிட்டு, தேவையில் உள்ள நம் சகோதரர், சகோதரிகளுக்கு, நம் ஆன்மீகம் மற்றும் பொருள் உதவிகளை வழங்குவோம்.

நோன்பு, செபம், தர்மம் செய்தல் ஆகியவை, வரலாற்றையும், அனைத்துப் படைப்புக்களையும் உட்படுத்தும் புரட்சியின் அடையாளங்கள் என்றும், நோன்பு என்பது, நமது பெரும்விருப்பங்களைத் திருப்திப்படுத்தும் எல்லாச் சோதனையிலிருந்தும் விலகுவதாகும் என்றும், சிலைவழிபாட்டையும், தன்னலத்தையும் கைவிட செபம் நமக்குக் கற்றுத் தருகின்றது என்றும், தனக்கென அனைத்தையும் வைத்திருக்கும் அறிவற்றதன்மையிலிருந்து தப்பிப்பதற்கு தர்மம் செய்தல் உதவுகின்றது என்று 2019ம் ஆண்டுக்கான, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் தவக்காலச் செய்தியை, அறிவித்தார்.

# போதைபொருள் ஒழிப்பு அமைதிப் பேரணி 31 பங்குனி 2019

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 31.03.2019 அன்று ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருள் ஒழிப்பு அமைதிப் பேரணி கொழும்பில் நடாத்தப்படவுள்ளது. இதற்கு முன்னர் நீர்கொழும்பு, றாகமை, துடல்ல ஆகிய இடங்களில் போதைப்பொருள் ஒழிப்பு பேரணி நடத்தப்பட்டது. அதேபோன்று இம்மாதம் 31ஆம் திகதி கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் நடத்த தீர்மானித்ததின்படி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயம், வத்தளை, நாயக்ககந்த பகுதிகளிலிருந்தும் மட்டக்குளி விஸ்ட்வைக் விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி மாலை 5.00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும். இப்பேரணியில் பல மதத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். அன்றைய தினம் கொழும்பு உயர்மறைமாவட்ட பங்குகளில் காலை திருப்பலியில் போதைப் பொருள் ஒழிப்பு பற்றி மக்களுக்கு அறிவிக்கபப்பட்டு திருப்பலியின் பின் இது சம்பந்தமான பதாதைகள் ஏந்தி சிறு பவனி ஒன்றை நடாத்துமாறு நமது பேராயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அன்பும், இரக்கமும், உதவிகரம் நீட்டும் இறைமக்களே நமக்குத் தேவை.





### பங்கின் புத்தெழுச்சியூட்டும் விசேட செயல்திட்டம்!

கொழும்பு உயர்மறைமாவட்ட பக்தி சபைகளின் பொறுப்பாளர்களின் ஒன்றுகூடலில் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமைத் தாங்கினார்கள். ‘கொழும்பு உயர் மறைமாவட்ட பங்குகளை புத்தெழுச்சியூட்டுவதன் மூலம் திருச்சபையை சக்திப்படுத்தும் செயல்திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய பணியை பக்திச் சபைகளின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது” கடந்த போயா தினத்தன்று கொழும்பு மருதானை புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற பக்திச்சபை பொறுப்பாளர்களின் ஒன்றுகூடலில் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறினார். மேலும் அவர் உரையாற்றுகையில்;

‘விசுவாசம் நிறைந்த, விசுவாசத்தைப் பகிர்ந்து தனது மீட்புக்காக மட்டுமல்ல, மற்றவர்களின் மீட்புக்காகவும் அயலவர்களில் அன்பும் இரக்கமும் காட்டும், அனைவருக்கும் உதவிடும், எந்நேரமும் மற்றவர்களுக்காக வாழும் இறை மக்கள் எமக்குத் தேவை. அவ்வாறான சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு பங்குத் தந்தையிடம் மாத்திரம் ஒப்படைத்து விட முடியாது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இறைவனுடன் இணைந்து வாழ நம் சகோதரர்களுடன் இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்வோம்.







### கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினையின்படி சமுகமாக இணைந்து இறைவனைத் தேட வேண்டும்!

நாம் எமது சகோதர சகோதரிகளுடன் இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்துக் கொண்டு இறைவனைத் தேட வேண்டும் என நீர்கொழும்பு பெரியதெரு புனித மரியாள் ஆலயத்தில் நடைப்பெற்ற இலத்தீன் பாடல் திருப்பலியின் மறை உரையின் போது அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்கள். 2016ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம் (தி.பா 51)

# அருட்சகோதரி. பொனவன்றைன் பஸ்ரியன்



நிலையாமை நிலைவாழ்வுடனும், சிற்றொளி பேரொளியுடனும், சிற்றலை பேரலையுடனும் இணைந்து சங்கமிப்பதே இயற்கையின் நியதி. இந்த வகையில் இவ்வுலக வாழ்விற்கு விடைகொடுத்து பேரின்ப வாழ்வின் பேரொளியாம் அன்பின் சக்தியோடு ஒன்றாக இணைந்திருக்கும் எம் அன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய அருட்சகோதரி பொனவன்றைன் பஸ்ரியன் அவர்கள் இறைபதமடைந்துவிட்டார். எதிர்-நோக்கும், நம்பிக்கையும் கொண்டவர்களாக பயணிக்கும் நாம், இவ்வேளையில் எம் சகோதரியின் வாழ்வினை உங்களோடு பகிர்ந்து இறைவனுக்கு நன்றி கூறுவது பொதுத்தமானது என நம்புகின்றோம்.

நாம் வாழும் இப்பிரபஞ்சத்தின் முடிவற்ற அன்பின் சுழற்சியிலே, திரு. திருமதி. பஸ்ரியன் குடும்பத்திற்கு இறைவன் அளித்த, ஒன்பது செல்வங்களில், மூன்றாவது பெண் குழந்தையாக 1938ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 14ஆம் நாள் இறை உயிரைத் தாங்கியவராக இப்பூமிக் குடும்பத்திற்குள் எம் சகோதரி ஒன்றாகினார். கரம்பொன் என்னும் கிராமத்தைப் பூர்வீகமாக கொண்ட இவர்கள் குடும்பம், மலேசியாவில் சில காலங்கள் வாழ்ந்தார்கள். எம் சகோதரி மலேசியாவில் முதல் நிலைக் கல்வியையும், இரண்டாம் நிலைக் கல்வியை யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலையிலும் நிறைவு செய்தார்.

திருக்குடும்ப சகோதரிகளின் வாழ்வும் பணியும் இவரைத் தொட்டதால், துறவு வாழ்வுக்கான ஆவலும் சிறிது சிறிதாக இவரில் பற்றி எரியத் தொடங்கியது. பாடசாலைக்கல்வி நிறைவடைந்ததும், சகோதரி தன் எதிர்காலத் தெரிவையும், ஆவலையும் பெற்றோரிடம் வெளிப்படுத்தினார். கடவுளின் நேரம் கனிந்து 1967ஆம் ஆண்டு திருக்குடும்ப சபையின் துறவு வாழ்விற்குள் இணைய அனுமதியும் கிடைத்தது.

எம் சகோதரியும் முழு விருப்போடும், நிறைந்த மகிழ்வோடும் துறவுப் பயணத்திற்குள் நுழைந்தார். எம் சகோதரி மூன்று வருடங்கள் குயவன் கையில் களிமண்ணாகி, துறவு வாழ்விற்குரிய வடிவம் பெற தன்னை முழுவதும் உடைத்து, நெகிழ்ந்து கொடுத்து உருமாற்றம் பெற்றவராக 1970ஆம் ஆண்டு புரட்டாதி 4ஆம் நாள் முதல் வாக்குத்தத்தத்தையும், 1975 ஐப்பசி 7ஆம் நாள் நித்திய அர்ப்பணத்தையும் தன் சொந்த மண்ணாகிய கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் செய்தார்.

எம் சகோதரியின் முதல் பணி மயிலிட்டியில் ஓய்வு நிலையில் வாழ்ந்த மூத்த சகோதரிகளுடனும், பின் யாழ் மாகாணத்தின் நிதி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருந்த சகோதரிகள் மாறி யோசவ், அனக்கிளற் ஆகியோருடனும் தொடர்ந்தது. அத்துடன் யாழ், சிங்கள மகாவித்தியாலயத்தில் மறைக்கல்வியும் கற்றுக்கொடுத்தார். இவரின் அப்போஸ்தலிக்கப் பணி ஆர்வமும், தூய்மையான வாழ்வும், விசுவாசம் நிறைந்த உறுதியான செயற்பாடுகளும், பணியின் பிரமாணிக்கமும் பணிக்கான பயிற்சிகளைப் பெறத் தளங்களாகின. இதற்கமைவாக மலேசியா, மனிலா, உரோமை, அயர்லாந்து, மாட்டியாக் ஆகிய இடங்களில் பணிகளுக்கான அறிவையும், பயிற்சியையும், அனுபவங்களையும் பெற்றார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம், பிரான்சிய மொழி, இத்தாலிய மொழி ஆகியவற்றில் நிறைந்த அறிவும், சரளமாகப் பேசும் ஆற்றலும் நிறைந்த இவர், பெற்றுக்கொண்ட துறவற அழைப்புக்கேற்ப, பெற்றதை பெருமகிழ்வுடன், கேட்போருக்கு இல்லை என்று சொல்லாது, தன்னிடமுள்ள அறிவு, ஆற்றல், திறமை, சக்தி, நேரம் அனைத்தையும் மிச்சம் என்று வைக்காது, மொத்தமாக தாராள உள்ளத்துடன் தனி நபருக்கும், குழுவுக்கும், யாழ் மாகாணத்துக்கும், திருக்குடும்ப நிறுவனத்துக்கும், திருஅவையின் பல்வேறு நிறுவனங்களுக்கும் கொடையாகப் பகிர்ந்தார். இந்த வகையில் இலண்டன் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தம் செய்பவராகவும், ஊவா மறைமாவட்டத்தின் மனித முன்னேற்ற நடுநிலையமாக இயங்கிய "உஸ்கோட்" நிறுவனத்தின் செயலாளராகவும், நிர்வாகப் பொறுப்பாளராகவும், சிறப்பாக பாப்பரசரின் மறைபரப்பு ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்களாக கடந்த காலங்களில் பணியாற்றிய ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை, தற்போதைய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோருடன் இணைந்து இவ்வாணைக்குழுவின் தேசிய செயலாளராகவும் பணிகள் புரிந்தார். அத்துடன் உரோமையிலுள்ள போர்டோவின் திருக்குடும்ப நிறுவனத்தின் தலைமையகத்தில், நிறுவனத்தின் செயலாளராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றினார். 2015இல் திருத்தந்தை....

தொடர்ச்சி 15ம் பக்கம்..





தை மாதம் 27.01.2019 ஞாயிற்றுகிழமை நாயக்ககந்தை காணிக்கை மாதா பங்கில் திருப்பாலத்துவ தினச் சிறப்புத் திருப்பலி அருட்பணி. வின்சன் (கி.ச) அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. எமது திருப்பாலத்துவ சபை சிறுவர் பாடல் குழுவினரே இத்திருப்பலிப் பாடல்கள் யாவையும் இசைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேற்பட படத்தில் திருப்பலிக் காணிக்கை பவனியில் திருப்பாலத்துவ சபை சிறுவர்களையும் காணலாம்.

**தகவல் : திருமதி. கோமதி ஜோன். திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்.**

# கொழும்பு பெரிய சிலுவைப் பாதை - 2019



கொழும்பு, யோசேவ்-வாஸ் மன்றம் 23வது தடவையாக தமிழ் மொழியில் ஒழுங்கு செய்யும், திறந்தவெளி பெரிய சிலுவைப்-பாதையானது இவ்வருடம் தவக்காலத்தின் முதல் வாரமாகிய பங்குனி 10ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய முற்றத்திலிருந்து ஆரம்பமாகி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், செக்கடித்தெரு வேளாங்கண்ணி ஆலயம் வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயம் வந்தடையும். அனைவரையும் இச்சிலுவைப்பாதையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். இவ்வருடம் விசேட விதமாக மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் அருட்பணி. ரஜனிகாந் அடிகள், மற்றும் அருட்பணி. நியூட்டன் அடிகளார் தங்களின் போதனையால் இத்திருச்சிலுவைப்-பாதையை வழிநடத்துகின்றார்கள். சிலுவைப்பாதை இறுதியில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகையினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**தகவல் : யோசேவ்வாஸ் மன்றம்**

# புனித வனத்து சின்னப்பர் திருவிழா








மத்துகம பொல்காகந்த தோட்டத்தில் மாசி 23ஆம் திகதி புனித வனத்து சின்னப்பர் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. திருவிழாவிலே பலர் பங்குபற்றினார்கள். விசேட விதமாக இந்த புனித வனத்து சின்னப்பர் பக்தி முயற்சியாக ஒரு குளத்தின் மேல் பல ஆண்டுகாலமாக ஒரு சிலுவை பொதுநிலையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவ்விடத்திலே புதிதான ஆலயம் நிர்மாணிக்க அடிக்கல் நாட்டப்பட்டது சிறப்பம்சமாகும்.

**தகவல் : திருவாளர் பிரான்சிஸ்.**



புனித செபமாலை மாதா ஆலயத்தில் தை மாதம் 30.01.2019 அன்று திருப்பாலர் மறைப்பரப்பு ஞாயிறு கொண்டாடப்பட்டது. அன்றைய சிறப்பு திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி. குருசன் குமார் பெரேரா அடிகளாருடன் பங்குத்தந்தை அருட்பணி. பீற்றர் சுபராஜ் அடிகளாரும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. ரவிந்திர பீரிஸ் அடிகளாரும் சிறப்பித்தனர்.

**தகவல் : சுபாஷினி டேவிட்**



புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய மறைப்பாடசாலை மாணவர்களின் தலைவர்கள் தெரிவு-செய்யப்பட்டு 24.02.2019 அன்றைய திருப்பலியில் அர்ப்பணம் செய்துகொண்டனர். மாணவத் தலைவர்-களையும், ஆசிரியர்களையும், பங்குத்தந்தையையும் படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. டயனா தீபன்.**

# நாட்டிலுள்ள சகல மதங்களையும் மதிப்பதன் மூலமே எமது மதத்தை சரியான முறையில் பின்பற்ற முடியும்.



நாட்டின் மற்றைய மதங்களுக்கு மதிப்பளிக்கும்-போது கத்தோலிக்கராகிய நாம் எமது மதத்தைச் சரியான முறையில் பின்பற்றுகிறோம் என்பது உறுதியாகிறது. பெரும்பான்மை மக்களைக் கொண்ட மதங்கள் இருக்கும் எமது நாட்டில் சிறுபான்மை கத்தோலிக்கராகிய நாம், மற்ற மதங்களை மதிப்பதன் மூலம் அவர்களுடனான அந்நியோன்ய உறவினாலும் நல்ல தொடர்பினாலும் மறைத் தூதுச் சேவையை நேர்த்தியாக ஆற்ற முடிகிறது என அநுராதபுர மறைமாவட்ட ஆயர் வண. நோபட் அந்திராது அவர்கள், அநுராதபுரம் இங்குராங் கொடையில் புதிய புனித அந்தோனியார் ஆலய அபிசேகத்தின் போது உரையாற்றுகையில் கூறினார்கள். அபிசேக வைபவத்தின் போது சிறப்பு விருந்தினராக வருகை தந்த தியமெனும விகாரை அதிபதி பௌத்த பிக்கு வண. தும்மதஸ்சி அவர்களும் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
03 பங்குனி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# “இறைவன் நமக்காக காத்திருக்கும் காலம் தவக்காலம்”

இன்னும் ஓரிரு தினங்களில் நாமனைவரும் தவக்காலத்தில் நுழையவிருக்கின்றோம். கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் பொதுவாக “தவக்காலம்” என்றதும் எமக்கு உடனே நினைவுக்கு வருவது இயேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகள் - மரணம் - உயிர்ப்பு ஆகியவற்றை தியானிக்கும் காலம், ஒறுத்தல்கள் செய்யும் காலம், தான தர்மங்கள் செய்ய வேண்டிய காலம், மனம்மாற வேண்டிய காலம் என பல. இருப்பினும், நாம் அவற்றை செய்கிறோமா, செய்தாலும் எப்படிப்பட்ட மனநிலைகளில் அவற்றை செய்கிறோம் என்பதுதான் முக்கியமானது. இறைவன் எதிர்பார்க்கும் உண்மையான மனமாற்றம் எமது வாழ்வில் நடைபெறுகிறதா? என்பது அதை விட மிகவும் முக்கியமானது. வழமைபோல் இந்த தவக்காலத்திலும் இறைவன் காத்திருக்கின்றார்.

எத்தனை பேர் தன்னிடம் உண்மையான மனமாற்றத்துடன் தமது பழைய பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி மனந்திருந்தி வரப்போகிறார்கள் என்று, நாம் எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும், எந்தளவுக்கு உலக மகா பாவியாக வாழ்ந்தாலும் ஆண்டவர் எம்மை ஏற்றுக்கொள்வார். ஆதலால், மனந்தளராமல் ஆண்டவரிடம் திரும்பி வருவோம்.

இறைவன் மனிதனை தனது சாயலாகப் படைத்தார். ஆனால், அவன் தனக்குள்ளிருந்த இறைதன்மையை மறந்து, மனித நிலையில் இறைவனாக மாற பேராசைப்பட்டு, பாவம், துன்பம், கொலை பழிவாங்கல் - மரணம் என்பவற்றுக்குத் தன்னை அடிமைப்படுத்த இடமளித்துவிட்டான். தமது பாவ வாழ்க்கையினால் இறைவன் மனிதரை கை விட்டு பிரிந்து தொலைதூரம் போனாலும் விட்டு விட விரும்பாமல், அவர்களை மீட்க விரும்பினார். அவர்களை அளவு கடந்து அன்பு செய்தார். தனது அருளை மனிதர் மேல் ஏராளமாகப் பொழிந்தார்.

மறுபடியும் தன் இறைதன்மையை மனிதருக்குள் புகுத்த விரும்பினார். அதனால்தான் இறைவன் கல்வாரி மலையில் தமது ஒரே மகனையே இரத்தம் சிந்த வைத்தார். தம்மக்களின் மொத்த வேதனையையும் தானே தனித்து ஏற்று தன் அன்பு மகனை இரத்தம் சிந்த வைத்தார். இந்த விலை மதிக்க முடியாத இரத்தத்தினால் பெற்று தரப்பட்ட மீட்பு, உண்மை, அன்பு, சமாதானம், இன்று எம்மண்ணில் எங்கேயாவது உண்டா, அன்று இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டதாலோ என்னவோ இன்று இரத்தத்தின் விலை தெரியவில்லை. ஆனால் இன்று எமது சொந்தங்கள் அன்றாடம் சிந்தும் இரத்தத்தின் மூலமாவது இரத்தத்தின் விலையை நாம் உணர தவறினால் எமது பின்னைய நிலை இன்றைய நிலையை விட மிக மோசமாகவே இருக்கும்.

எம் வாழ்வில் அமைதியின் காலத்தை நீதியின் காலத்தை பகிர்தலின் காலத்தை, புரிந்துணர்வின் காலத்தை மகிழ்ச்சியின் காலத்தை அனுபவிக்க முடியாவிட்டால் எத்தனை காலங்கள் எம் வாழ்வில் இருந்துதான் என்ன பலன்? ஆதலால் இந்த தவக்காலத்தையாவது அர்த்தமுள்ள முறையில் எம் வாழ்வை சீர் தூக்கிப் பார்க்க பயன்படுத்துவோம். மனமாற்றம் பெற்று புதுவாழ்வைப் பெற்றிட இறையாசீர் உங்களோடு...

**இறையாசீருடன் ஆசிரியர்**


## சாம்பல் புதன் - தவக்காலம் ஆரம்பம்



இது தவக்காலம்,
ஆண்டுதோறும் தவறாமல் வரும் காலம்.
செபம், தவம், தானதர்மம்,
உபவாசம், ஒப்புரவு, சிலுவைப்பாதை,
திருயாத்திரை போன்ற
ஆலய அனுசரிப்புகளில் அதிகம்
ஆர்வம் காட்டும் காலம்.
இத்தகு புற மாற்றங்கள் நமக்குள்
அக மாற்றத்தையும் அளித்தல் வேண்டும்.
வெளி ஆடம்பரங்களில்
மூழ்கிப் போன நமக்கு ஆலய
அனுசரிப்புகளோடு பிறர் நலம்
விசாரிப்புகளும் இருக்கட்டும்.
உண்ணாமல் இருப்பது நோன்பென்றால்
பசித்தோருக்கு உணவைப்
பகிர்ந்தளிப்பதும் நோன்புதான்.
சிலுவைப்பாதை செய்வது
தவமென்றால் - பிறர்
துன்பச் சுமைகளை
தாங்கிக் கொள்வதும் தவம் தான்
கண்ணீர் சிந்தி,
இறைவனின் பாடுகளைத்


# தவக்காலம் - 2019

தியானிப்பதோடு - பிறர்க்கு
எண்ணில்லாக் கருணையைப்
பொழிவதும் தியானம் தான்.
ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதோடு,
பகைவரோடு ஒப்புரவாகிப் போவதும்
உண்மைத் தவம்தான்.
ஊன் உண்ணாமை
நன்றுதான் - ஆனால் பிறர்மனம்
புண்ணாக்காமல் இருப்பது
அதைவிட நன்றல்லவா!
செபிப்பது மட்டுமல்ல - தவம்
வாழ்வில் திக்கற்றவர்களுக்கு
செபிக்க வழிகாட்டுவதும் தவம்தான்.
அன்று சாக்கு உடையும்,
சாம்பலையும் போல், இன்று
காவி உடையும்
கழுத்தில் செபமாலையும்
அணிவது தவம் என்றால்,
உள்ளத்தில் கனிவு, கருணை
என்ற ஆடை அணிந்து ஆங்கோர்
நலிந்தவைகளைக் கைத்தூக்கி விடுவதும்
உண்மைத் தவம் தான்.
ஏழைகள் மீது அக்கறையின்றி
எடுக்கப்படும் எல்லா தவக்கால முயற்சிகளும்
விழலுக்கிறைத்த நீர்தான்.
எனவே,
இவ்வாண்டு தவக்காலத்திலாவது
நாம் எடுக்கும் நோன்புகளும்,
செய்யும் செபங்களும்
சிலுவைப்பாதைகளும்
அகமாற்றத்தைத் தருவதோடு
புறமாற்றத்தையும், சமுதாய மாற்றத்தையும்
தருபவையாக அமையட்டும்.
அப்போது அர்த்தமுள்ள
தவக் காலத்தில் வாழலாம்.





## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# பாவம்




**உறவுக்காக படைக்கப்பட்டவன் மனிதன். அந்த உறவு முறியும்போது அது பாவமாகின்றது**

# சில சிந்தனைகள்

தவக்காலம் அருளின் காலம்! இது இரக்கத்தின் காலம்! மன்னிப்பின் காலம்! இந்த அருளின் காலம், இறை அருள் நம்மில் செயல்படும் விதத்தைக் கூர்ந்து கவனிக்க, இந்த இறை அருளுக்கு நம் பதிலிறுப்பை ஆய்வு செய்கின்றது. அபரிமிதமாகப் பொழியப்படும் இறை அருளை மறந்து, இறைவனிடமிருந்து விலகி ஓடும்போது, கட்டாயமாகப் பாவம் செய்கின்றோம்

பாவம் மிக முக்கியமான - ஆனால், பழமையான ஒரு கருத்தியல். அதனாலேயே ஒருவேளை இன்று நம் மக்கள் பாவத்தைப் பற்றி அதிகம் பேசுவதும் இல்லை, கவலைப்படுவதும் இல்லை என்று தோன்றுகிறது. பாவம் பற்றி யாராவது ஏதாவது பேசினால் அல்லது எழுதினால் "அய்யய்யோ ஆள விடப்பா சாமி" என்று தலைதெறிக்க ஓடும் சில கூட்டமும் இருக்கிறது.

திருஅவை எப்போது பார்த்தாலும் பாவம் பாவம் என்று கூறிக்கொண்டே இருக்கிறது என்ற சிந்தனையும் சிலருக்கு உண்டு. திருத்தந்தை பத்தாம் பத்திநாதரின் கூற்றுப்படி இன்று உலகில் பாவம் என்ற சிந்தனையே பலருக்கு இல்லை.

## பாவம் என்றால் என்ன?

உறவின் முறிவு பாவம்! இது சாதாரணமாக நாம் கூறுவது. இது எளிமையாகத் தோன்றினாலும், இதன் அர்த்தங்கள் பலப்பல. இந்த உறவையே மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். மனிதன் அடிப்படையில் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன். இந்த மனிதன் வாழும் காலம் முழுவதும் ஆண்டவரோடு நெருங்கிய தொடர்பில் இருக்கப் படைக்கப்பட்டவன். இந்தத் தொடர்பு உறவின் அடிப்படையில் அமைந்த ஒன்று. உறவிலே உறவுக்காகப் படைக்கப்பட்டவனே மனிதன். இந்த அடிப்படை உறவு முறியும்போது அது பாவமாகிறது.

முதல் நிலையிலே இந்த உறவு மனிதர் தம்மோடு தாம் கொள்கின்ற ஓர் உறவுப் பரிமாற்றம். அதாவது என்னை நான் முழுமையாகப் புரிந்திருக்க வேண்டும். என்னை நான் என் நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். என்னையே நான் பரிதாபத்தோடு பார்ப்பது, என்னையே நான் குறை சொல்வது, என்னை ஏற்றுக்கொள்ளாமல், தாழ்வு மனப்பான்மையோடு பார்ப்பது, மற்றவரோடு என்னை ஒப்பிட்டு மனம் நோவது.... இவை எல்லாம் ஒரு வகையில் பாவமே.

இரண்டாவது நிலையிலே, இந்த உறவு கொஞ்சம் விரிகிறது. இந்த நிலையிலே உறவானது, மனிதருக்கும், சக மனிதருக்கும் இடையே நடக்கும் பாசப் பிணைப்புக்களைக் குறிக்கிறது. ஒரு மனிதன் தன் உலகினை, தன் அயலாரோடு கொள்ளும் நட்பிலே, உறவிலே விரிவாக்கம் செய்கிறான். அப்படி விரிவாகும் உறவு, அன்பிலே மகிழ்ந்து, நேர்மறையாக விரிவடையலாம். மணம் வீசலாம், அல்லது கசப்பிலே தோய்ந்து, எதிர்மறையாகவும் மடிந்த சருகாகலாம்.

மூன்றாவது நிலையிலே, இந்த உறவு மிகவும் அழகாக, இந்தப் பிரபஞ்சத்தை நோக்கி நகர்கிறது. தன்னை அன்பு செய்யும் ஒருவன் தன் அயலானையும் நேசித்து, இந்த மூன்றாம் நிலையிலே அண்ட சராசரங்களை நோக்கி தன் உறவுக் கரங்களை விரிக்கிறான். இந்த அண்ட வெளியிலே, அன்பைப் பிரதானமாக்கிய மனிதன், தன் அன்புச் செயல்களால், இந்தப் பிரபஞ்ச வெளியை பரிபூரணமாக நிறைக்கிறான்.

கிரேக்க சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒரு பொருளை இரு கூறாகப் பார்ப்பது அல்லது நேர் எதிராகப் பார்ப்பது. இருளும் - ஒளியும், பகலும் - இரவும், நன்மையையும் - தீமையையும், வடக்கும் - தெற்கும், இனிப்பும் கசப்பும், கடைசியாக நீயும் - நானும் என்பதுபோல. யூதச் சிந்தனையானது இப்படி முரணாகப் பார்க்காமல், வாழ்வை ஒரு முழுமைக் கண்ணோக்கில் பார்ப்பது. நாம் வணங்கும் இறைவன் ஒரு முழுமையின் நாயகன். ஒரு முழுமையான கடவுள். இவரிடம் முரண்பாடுகளைக் காணுதல் இயலாது. முரண்பாடுகளுடன் கூடிய ஒருவர் கடவுளாகவும் இருக்க முடியாது. எனவே எப்போது ஒருவர் பாவம் என்ற பிரிவில் விழுந்து உறவில் பிரிகிறாரோ அல்லது எப்போது அவர் முழுமைக் கண்ணோட்டத்தை இழந்து விடுகிறாரோ அப்போதே அவர் இறைவனிடமிருந்து வெகு தொலைவில் சென்றுவிட்டார் என்பதை அறியலாம்.

திருஅவையின் மறைக்கல்விப் போதனையின் படி பாவம் என்பது இயற்கையாகவே இறைவன் கொடுத்தி-ருக்கும் அறிவிற்கும், உண்மைக்கும், மனச்சான்றுக்கும் எதிராகச் செய்யப்படும் ஒரு செயல். அதோடு, பாவம் என்பது இறைவனோடும் சக மனிதரோடும் கொண்டுள்ள அன்புறவில் பின்தங்குவது. மூன்றாவதாக, பாவம் என்பது சில பொருட்கள் மீது மிதமிஞ்சிய பற்றுக்கொண்டிருப்பது. முடிவாக, பாவம் என்பது இறைவன் வழங்கிய இயற்கை அறநெறிக்கு முரணானது.

சாதாரணமாக, உலகின் சமயங்கள் பாவங்களை அவற்றின் இயல்புக்கேற்ப முறைப்படுத்துகின்றன. இஸ்லாம் சமயமானது ஏழு பெரும் பாவங்களை இவ்வாறு வகைப்படுத்துகின்றது.

1. இறைவனுக்கு இணையவைத்தல் (இறைவனுக்கு சமமாக பொருளையோ, ஆட்களையோ வைத்தல்)
2. சூனியம் செய்தல்
3. நியாயமின்றி ஓர் உயிரைக் கொலை செய்தல்
4. வட்டியை உண்ணுதல்
5. அநாதைகளின் சொத்தை விழுங்குதல்
6. போர் நடக்கும் தினத்தில் புறமுதுகை காட்டுதல்.
7. ஒழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறுதல்

நம் கிறிஸ்தவ மறையிலும் நாம் ஏழு பாவங்களைப் பற்றியும் ஏழு புண்ணியங்களைப் பற்றியும் பேசுகிறோம். நம்முடைய கிறிஸ்தவ நோக்கில், காமம், பெருந்தீனி, பேராசை, சோம்பல், வெஞ்சினம், பொறாமை மற்றும் தற்பெருமை ஆகிய ஏழும் சாவான பாவமாகக் கருதப்படுகின்றது. பாவத்தையே மட்டும் காட்டாமல், கத்தோலிக்க நம்பிக்கை மனிதரை நல்வழியில் நெறிப்படுத்தும் பொருட்டு ஏழு நல்ல ஒழுக்கநெறிகளையும் (புண்ணியங்களையும்) இந்த ஏழு பாவங்களுக்கும் மாற்றாகக் காட்டுகின்றது.

எடுத்துக்காட்டாக காமத்திற்கு எதிராக கற்பு நெறியையும், பெருந்தீனிக்கு எதிராக அளவோடு உண்பதையும், பேராசைக்கு எதிராக தாராள மனதையும் சோம்பலுக்கு எதிராக கடுமையான உழைப்பையும், வெஞ்சினம் சுட்டிக்காட்டும் பழி வாங்கும் மனப்பாங்கிற்கு எதிராகப் பொறுமையையும், பொறாமைக்கு எதிராக தயை நிறைந்த உள்ளத்தையும், தற்பெருமைக்கு எதிராக தாழ்ச்சியையும் முன்னிறுத்துகிறது.

இந்த ஏழு பாவங்களைப் பற்றிய ஒரு சிறிய விளக்கத்தைப் பார்ப்போம்.

**1. காமம் :** lust என்ற ஆங்கில வார்த்தையால் குறிக்கப்படும் இந்தப் பாவநிலை குறித்து அதிகம் சொல்லத் தேவையில்லை. Love என்ற ஆங்கிலச் சொல்லால் குறிக்கப்படும் தூய்மையான அன்பிற்கு எதிராகச் செய்யப்படும் அனைத்துச் செயல்களும் பாவச் செயல்களே. திருமண அருட்சாதனத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற ஆண் - பெண் உறவுகள், அங்களுக்கு என்று இறைவன் அனுமதித்திருக்கின்ற ஒரு புனிதத் தளத்தைவிட்டு, விலகிச் செல்லும்போது, இந்தப் பாவம் தன் ஆளுமையைக் காட்டுகின்றது. பழைய ஏற்பாட்டில் இறைவனின் பல்வேறு தூய்மைக் கட்டளைகள் எவ்வாறு இந்தப் பாவம் அன்று நோக்கப்பட்டது என்பதைக் காட்டுகின்றது. எனக்கு உரிமையில்லாத ஓர் அன்பு உறவை அல்லது எனக்குச் சொந்தமில்லாத ஒன்றை நான் என்னுடையதாக்க, வலிந்து முயலும்போது நான் இந்தப் பாவத்தில் விழுகின்றேன்.

**2. பெருந்தீனி :** இரண்டாவது பெரிய பாவம் கத்தோலிக்கத் திருஅவை, பெருந்தீனியை ஒரு பாவமாகப் பார்ப்பதை, இன்றைய நவீன உலகில் மிகச் சிறப்பான ஓர் அம்சமாகப் பார்க்கலாம். இன்று இருவகை உலகைப் பார்க்கின்றோம். ஒன்று பசியால் வாடி, வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகிறோம் என்று இருக்கும் ஒரு பெரும் ஏழை மக்கட்கூட்டம். மறுபுறம், உண்ட உணவு செரிக்க, தினம் ஓடி உடற்பயிற்சி செய்யும் ஒரு பணக்காரக் கூட்டம். இன்று பெருந்தீனியால் சிறுவர் சிறுமியருக்கும் சர்க்கரைநோய் வந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள் மருத்துவர்கள். இயேசு காட்டிய நற்கருணை, உணவைப் பகிர அழைக்கிறது. பிறரை நினைக்காமல் பெருந்தீனி தின்பது அல்லது உணவுக்காகவே வாழ்வது இவை பெரும் பாவம்.

**3. பேராசை :** பேராசை பெருநஷ்டம் என்கிறது தமிழ் பழமொழி. "ஆசை கொள்ள வேண்டியது தான். ஆனால், அதுவே பேராசையாக மாறும்போது, பாவமாகிறது. ஒரு வகையில் பேராசைக்கு சரியான ஒரு உதாரணம், தான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று இறைவனிடம் வேண்டி, கடைசியில் தன் மகளையே பொற்சிலையாக்கிய மைதாஸ் கதைதான். இன்றைய உலகில், பங்கு வணிகம் போன்ற ஊடக, வணிகச் செயல்களால் பலர் பேராசைக்கு உட்பட்டு, உள்ளதையும் இழக்கிறார்கள். பல பெரும் முதலாளிகளோ, தங்களின் பேராசையால், கோடிகளைச் சுருட்டி, வெளி நாடுகளுக்குத் தப்பி, தங்கள் தாய் நாட்டை மறுதலித்து, ஏற்கனவே உள்ள ஏழை மக்களை இன்னும் பரம்பரை ஏழையாக்குகிறார்கள்.

**4. சோம்பல்:** இங்கே பாவமாகக் குறிப்பிடப்படுவது, எந்த வேலையும் செய்யாமல் சோம்பி இருக்கும் நண்பர்களை மட்டும் அல்ல, மாறாக, மந்தமாக, மற்றவரையும் தன் மந்த நிலைக்கு இழுத்துவரும் மகா சோம்பேறிகளைக் குறிக்கிறது. நம் இறைவனை எப்போதும் உழைக்கும் ஓர் இறைவனாக, ஓய்வில்லாமல் வேலை செய்யும் ஒருவராக, விவிலியம் சித்தரிக்கும்போது, சோம்பல் என்பது உண்மையில் பாவமே!

**5. வெஞ்சினம் :** சாதாரண கோபம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்று. பழைய ஏற்பாட்டில், அறநெறிச் சினம் கொள்ளும் பல இறைவாக்கினர்களைப் பற்றி வாசிக்கின்றோம். சாதாரணச் சினம், கட்டுக்கடங்காமல் போகும்போது, அது அடங்காத காட்டுத் தீ போன்று உக்கிரத்துடன், எல்லாவற்றையும் சுட்டெரித்துச் சாம்பலாக்குகின்றது. இன்று நாம் காணும் பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வெஞ்சினம் என்ற ஒரு கருத்தியல் இல்லையேல், நான்றுக் கொண்டு செத்துவிடும். மிகுந்த அழிவை உண்டாக்கும் இது பாவம் தானே?

**6. பொறாமை :** சேக்ஸ்பிரியரின் உன்னதமான படைப்புகளில் ஒன்று - "ஓதெல்லோ" நாடகம், துன்பியல் நாடகமாக இதன் கரு - பொறாமை என்பதே. பொறாமை மனிதரை வேரோடு அழிக்கக் கூடிய ஒரு பாவச் செயல். விவிலியத்தில் நாம் காணும் முதல் கொலையில் அடிப்படையே பொறாமைதான். காயின், தன் சகோதரன் ஆபேலை, பொறாமையின் நிமித்ததே கொல்கிறான். பொறாமைக்கு பாதுகாப்பின்மையும், பய உணர்வுமே காரணம். இதுவும் பாவமே!

**7. தற்பெருமை :** நானே கடவுள் - என்னால் முடியாதது எதுவும் இல்லை. எனக்குத் தெரியாதது இந்த உலகில் எதுவும் இல்லை என்ற நிலைக்கு என்று ஒருவர் வருகிறாரோ அன்றே அவரது அழிவு ஆரம்பமாகின்றது. இந்த பாவ நிலையை தற்பெருமை என்கிறோம். ஒரு வகையில் மித மிஞ்சிய நிலையில், ஒருவர் இறைவன் தனக்குக் கொடுத்திருக்கும் திறமைகளை, தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்தினால், அது மிகப்பெரிய பாவம்.

"பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது" இது பவுலடிகளார் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் நாம் வாசிப்பது. மனிதர் பாவம் செய்யாமல், நான் வான தூதர் போல இருப்பேன் ஒருவர் ஒருவேளை சொல்லலாம். ஆனால் அப்படி வாழ்வது மிகக் கடினம். வாழ்வு என்ற கொடையைக் கொடுத்த இறைவன், அந்த வாழ்வை நாம் செம்மையாக வாழ அழைக்கிறார். பாவத்தைக் குறைத்து, அருளை மிகுதியாக்க, ஆண்டவனை, இந்தத் தவக்காலத்தில் சிறப்பாக வேண்டுவோம்.

# நம்பிக்கைகள்.






ஒவ்வொரு இளைஞர்களுக்கும் இருக்க-வேண்டிய மூன்று வகையான நம்பிக்கைகள். இளைஞர்களே, உங்களிடம் இவை மூன்றும் உண்டா? உண்டென்றால் வாழ்வில் உங்களால் முன்னேற முடியும். பிறரையும் முன்னேற்ற முடியும்.

1. தன்னம்பிக்கை
2. பிறர்மீது நம்பிக்கை
3. கடவுள் மீது நம்பிக்கை

**தன்னம்பிக்கை குறைய குறைய...**

1. பாதுகாப்பற்ற உணர்வு வளர்ந்துவிடும்.
2. தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பாண்மை உருவாகும்.
3. எதிர்மறையான சிந்தனையும், போக்கும் விரைவாக வளரும்
4. நரம்புத் தளர்ச்சியையும், பரபரப்புத் தன்மையையும் கூட்டும்.
5. மனதை ஒருமுகப்படுத்தி செயல்படாதபடி தடை-செய்யும்
6. நல்ல முடிவுகள் எடுக்க முடியாமல் போகும்.
7. நன்னடத்தையைத் தடுத்தாட்கொள்ளும்.
8. தோல்விக்கு வழிவகுத்து, விரக்தியை விரைவாகக் கொண்டு வரும்.
9. ஆளுமை உருவாக்கம், பாதிப்புக்கு உள்ளாகும்.
10. பிறர் நம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் பயனற்றதாகத் தோன்றும்.

**பிறர் நம்பிக்கை குறைய குறைய...**

1. சந்தேகம் என்ற நோய் வந்துவிடும்.
2. உறவு முறிந்து போகும்.
3. மகிழ்ச்சி உள்ளத்திலும், இல்லத்திலும் இருந்து மறைந்துவிடும்.
4. தனிமைப்படுத்தப்பட்டு விடுவோம்.
5. வாழ்க்கைக்குப் பொருளில்லை என்று தோன்றும்
6. யாரும் நம்மைத் தேடி வரமாட்டார்கள்.
7. சுற்றியுள்ளவர்கள் அனைவரும் கெட்டவர்களாகவே தோன்றும்.
8. தன்னைப்பற்றிய நம்பிக்கையும் குறையும்
9. பெற்றுக்கொண்ட கல்வி, அறிவு ஆகிய அனைத்தும் பயனற்றவையாகத் தோன்றும்.
10. கடவுள் மீது கொள்ளக்கூடிய நம்பிக்கையும் குறையும்.

**கடவுள் மீது நம்பிக்கை குறைய குறைய...**

1. பிறரைப்பற்றிய தாழ்வான, இழிவான எண்ணங்கள் உருவாகும்.
2. தான் சிந்திப்பதும், சொல்வதும், செய்வதும் மட்டுமே சரியானவை என்ற எண்ணம் எழும்.
3. தன்னம்பிக்கையும் பிறர் எண்ணிக்கையும் மெல்ல மெல்ல இல்லாமல் போய்விடும்.
4. பிறரோடு கொள்ளும் உறவு பயனற்றது என்ற வியாபாரப் போக்கு வந்துவிடும்.
5. மனதில் அமைதியை இழக்க நேரிடும்.
6. உலகப்போக்கு அதிகரித்து அனைத்தும் பயனற்றதாகத் தோன்றும்.
7. தோற்றத்தில் மனிதராக இருந்தாலும், சிந்தனை, சொல், செயல், அனைத்தும் மனிதத்திற்கு முரணானதாக அமையும்.
8. செய்யும் செயல்களில் பிடிப்பில்லாமல் போகும்.

**வெள்ளத்து அனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு (595)**

## இலட்சியம்

இளைஞர்கள் காண விளைவது புத்துலகென முன்பு அறிந்துள்ளோம். எவரும் எண்ணிப் பார்க்க இயலாத எண்ணில்லாப் பரிமாணங்களைக் கொண்டதே விவிலியம். இளைஞர்களுக்கு விவரிக்கும் புத்துலகம். இப்புத்துலகு இயேசு விண்ணிலே பார்த்துப் பார்த்துப் பழகிப் போனதேயன்றி வேறில்லை. (யோவா 3:11) விண்ணிலே தாம் சுவைத்து அனுபவித்த வாழ்க்கையை மண்ணில் படைப்பதே இயேசுவின் கனவு.

மண்ணவர்க்காக இயேசு கண்ட கனவு எது? அசிங்கத்திலே தோன்றி, அசிங்கத்திலே வாழ்ந்து அசிங்கத்தோடு மறையும் ஒரு புழு. அதுபோல மண்ணிலே பிறந்து மண்ணுக்காகவே போராடி மண்ணோடு மண்ணாக மறைந்து போகும் வாழ்வல்ல. அல்லது நாற்றத்திலும் நறுமணத்திலும் குடியிருக்கும் ஈ. அதுபோல ஆற்றிலொரு கால் சேற்றிலொரு கால் வைக்கும் வாழ்க்கையுமல்ல (யோவா 18:36). மாறாக உயர்ந்த கிளையில் தொங்கும் தேனடையில் மட்டும் வீற்றிருக்கும் தேனீ. அதுபோல வானகம் என் தாய் நாடு (பிலி 3:20) என்ற மிக உயர்ந்த மதிப்பீடுகளை மண்ணில் வாழ்வதே இளையோரின் இலட்சியமாகும்.

எனவே எண்ணம் போல் வாழ்வு. எண்ணம் இல்லையேல் வாழ்வு இல்லை. எண்ணத்தை உயர்த்து உன் வாழ்வு உயரும். எண்ணத்தை விரிவுபடுத்து உன்னுடைய உலகமும் விரிவடையும். எண்ணத்தை மாற்று உன் வாழ்வும் மாறுபடும். எண்ணத்தை உறுதிப்படுத்து உன் வாழ்வும் நிலைபெறும்.

எண்ணம் போல் வாழ்வு என்பர். எண்ணியதை எண்ணியபடியே எய்திவிடுவர். திண்ணிய மனதை உடையவர். சில வீரர்களுக்கு ஒலிம்பிக் விளையாட்டில் தங்கப் பதக்கம் கிட்டவில்லை ஏன்? அதைப்பெற வேண்டுமென்ற உறுதியான தீர்மானமில்லை. குடிசையில் வாழ்கிறவன் கோபுரத்தை நினைக்கவில்லை. அதனால் அவன் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஒரு தாலந்து பெற்றவன் (மத் 25:24) திட்டமிடவில்லை. அதனால் பெருக்கவில்லை. ஐந்து தாலந்து பெற்றவன் குறிக்கோளோடு செயல்பட்டான். அதைப் பத்தாகப் பெருக்கினான்.

சாலை ஓரத்திலே ஒருவன் நிற்கிறான். வாட்டசாட்டமான மனிதன். மனிதக் கழிவைத் தின்று கொண்டிருக்கிறான். அவனுக்கு எண்ணமுமில்லை குறிக்கோளுமில்லை. காணாமல் போன மகன் பன்றிகளோடு வாழ்கிறான். பன்றியின் உணவை உண்ணுகிறான். அவனுக்குக் குறிக்கோளில்லை வாழ்வில் இலட்சியமில்லை (லூக் 15:11-32). இயேசுவைச் சந்தித்த இளைஞனுக்கு இலட்சியம் இருந்தது. ஆனால் இலட்சியத்தில் பிடிப்பில்லை. (மாற் 10:17-22). அதனால் தெரிவு செய்த இலக்கை இடையிலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டான். இறுதிவரை நிலைத்து நின்று வெற்றி பெறுகிறவனே இலட்சியவாதி. சுதந்திரம் என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டிருந்தார் காந்தி. அவருக்கு முன்னும் பின்னும் எவரும் எண்ணிப் பார்க்காத ஓர் உயர்ந்த இலட்சியம் அது. கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சையெனும் அறப்போர் தொடுத்து வெற்றி பெற்றார். இதற்குக் காரணம் அவரது அகத்தில் எழுந்த ஆன்மீக பலமே. இச்செயலே அவருக்கு மகாத்மா, தேசப்பிதா என்ற...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## “மனிதா நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்குத் திரும்புவாய்”

## “தவக்காலம் தலைசிறந்த காலம், செப, தப, தான தருமங்கள் புரிந்து, மனந்திரும்பி வாழ அழைக்கும் காலம்”

கிறிஸ்தவ வாழ்வை கிறிஸ்தவனுக்குரிய முறையில்
வாழ நினைவுகூர அழைப்பது தவக்காலம்.
கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்தவ வாழ்வை கிறிஸ்துவுடன்
வாழ அழைக்கும் காலம் தவக்காலம்.
கிறிஸ்து - அவன் கிறிஸ்தவன், பெயரளவில் அல்ல,
பொருளுணர்ந்து வாழ வரவழைக்கும் காலம்
தவக்காலம்.

தந்தையாம் இறைவன் தரணியை மீட்க தன் மகனை
தாரைவார்த்ததை நினைவு கூருவோம்.
தவக்காலமென தாய் திருச்சபை தம்மவரை
மனந்திரும்ப அழைப்பதை நினைவு கூருவோம்.
தரணியை அன்பு செய்த தந்தை, தன்
தவப்புதல்வனை எம்மை மீட்க அனுப்பியதை
நினைவு கூருவோம்.
தன்னலம் கருதாமல் பிறர்நலம் தேடி சேவை செய்ய
அழைப்பதை நினைவு கூருவோம்.

மானிடரை மீட்க மனுவுருவெடுத்து மரித்ததை
நினைவு கூருவோம்.
மாண்புடன் வாழ மக்கள் இறைமக்களாய்
வாழ வேண்டுமென்பதை மனதில் கொள்வோம்.
மாசு நிறைந்த மனித வாழ்வை மாசின்றி
வாழ வேண்டுமென்பதை மனதில் கொள்வோம்.
மாந்தர் நாம் எல்லோரும் மன்னன் இயேசுவின் பாதம்
பணிசெய்ய வேண்டுமென்பதை மனதில் கொள்வோம்.

செப, தப, தான தருமங்கள் புரிந்து
தவக்காலத்தை அனுசரிப்போம்.
செய்யும் அனைத்தையும் சிறப்புடன் செய்து
இயேசுவிற்காய் வாழ்வோம்.
செபமாலை குடும்பமாய் தினமும் செபித்து
குடும்ப வாழ்வைக் கட்டி எழுப்புவோம்.
செயற்பாடுகள் பல புரிந்து பிறர்சிநேக பணி
பல புரிந்து செயற்பட்டு வாழ்வோம்.

உடைகளை கிழிக்காமல் உள்ளத்தை கிழியுங்கள்
என்றார் யோவேல் இறைவாக்கினர்.
உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன, உவந்தவனாய்
வாழ அழைக்கின்றார் இயேசு.
உடைந்த உள்ளத்துடன் மனந்திரும்பி வாழ
தாய் திருச்சபை அழைக்கிறது.
உவப்பான காலம், உவந்த காலம் மகனே, மகளே
வா என அழைக்கின்றார் எம் பிரான் இயேசு.

ஊதாரி போல் வாழ்ந்து,
உன் வாழ்வை சிதறடிக்காதே,
ஊக்கமுடன் செயல்பட்டு உன் வாழ்வை
திருந்தி வாழ மறவாதே,
ஊனும் சதையும் உரிந்து போகும்
உவந்த உள்ளம் உன் தேவன் வாழும் இல்லம்
ஊழிக்காலமும் சேவை செய்ய உன்னை இயேசு
அழைக்கின்றார் மகனே சென்றிடு.



மைந்தர்கள் நாம்
மனந்திரும்பி
வாழ்வோம் -
மா மைந்தன்
இயேசுவிற்காய்
வாழ்ந்து
முடிவில்லா
வாழ்வை
சுதந்தரிப்போம்.
மைந்தர்கள் நாம்
வாழ அழைப்பவன்
மாபரன் இயேசு.
மைந்தர்கள் நாம்
இறைமக்களாய்
வாழ பேறுபெற்றவர்-
களாவோம்.

தவக்காலம் தவக்காலம் தாசர்கள் எமக்கு
தாய் திருச்சபை தந்த காலம்.
தவக்காலம், தவக்காலம் இயேசுவின் பாடுகள்,
மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் காலம்.
தவக்காலம், தவக்காலம், தவப்புதல்வர் புதல்விகளாய்
தருமம் செய்ய அழைக்கும் காலம்.
தவக்காலம், தவக்காலம் தாழ்ச்சியுடன் மனம் திரும்பி
வாழ அழைக்கும் காலம்.

அருட்பணி. டெலாறோஸ். அ.கா

### நம் பண்பாட்டை நாமே உருவாக்குவோம்!

ஒவ்வோர் ஆண்டும் அகில உலகப் பெண்கள் நாளை பங்குனி எட்டாம் நாள் கொண்டாடுகின்றோம். "எந்த ஒரு குழுவையோ, நாட்டையோ சார்ந்தவர்களாயினும் சரி, தாங்களே தங்கள் சமூகத்தின் பண்பாட்டை உருவாக்குபவர்கள் எனவும் அதை வளர்ப்பவர்கள் எனவும் உணர்கின்ற ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது". என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது.

# அகில உலக பெண்கள் நாள்




"அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?", "அடுத்தவன் வீட்டிற்குப் போகும் பெண்ணுக்கு படிப்பெதற்கு?" என்று பெண்களைப் படிக்க வைக்காமல், ஆண்கள் மட்டும் படித்தால் போதுமென நம்மில் பலர் நினைக்கின்றோம். சாப்பாடு, உடை போன்றவற்றிற்கு ஆண்களுக்குச் செய்யும் செலவைவிட, பெண்களுக்குக் குறைவாகவே செய்கின்றோம். ஒரு பெண் தனக்கு உகந்த மணமகனைத் தானே தேர்ந்தெடுக்க முடியுமா என்பது கேள்வியாகத்தான் உள்ளது. இடம், நேரம் என்று பார்க்கும்போது, ஆண்கள் எங்கும் போகலாம். எப்போதும் வீடு திரும்பலாம், பெண்களுக்கு அந்த உரிமைகளெல்லாம் கிடையாது. இவ்வாறு ஆண்களுக்கு ஓர் அளவுகோலும், பெண்களுக்கு ஓர் அளவுகோலுமாக நடைமுறையில் இருப்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இவையனைத்துக்கும் காரணம் நமது சமுதாயம். ஆணாதிக்கச் சமுதாயமாக இருப்பதும், அதனை அடிப்படையாகக் கொண்ட உலகப் பார்வையும்தான்.

### சமயங்கள், பண்பாடு, பெண்கள்!

சமயங்கள் அனைத்துமே மனிதப் பண்பாட்டில் வேரூன்றியுள்ளன. இந்து மதம், புத்த மதம், இஸ்லாம், கிறிஸ்தவம் இவையனைத்தும் வெவ்வேறு பண்பாடுகளில் வேரூன்றியுள்ளன. பண்பாடும், சமயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இவையிரண்டுமே சமூகத்தில் பெண்களின் வாழ்வை, வாழ வேண்டிய முறைகளை நிர்ணயிக்கின்றன. கவிதைகளில், காவியங்களில், கதைகளில் பெண்கள் வானளாவப் புகழப்பட்டாலும், பண்பாட்டில் பழக்கவழக்கங்களில் அவர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகவே இன்றும் கருதப்படுகிறார்கள்.

"பொதுவாக ஆரியச் சமூகம் (ஆண்களைவிட) பெண்களைத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களாகக் கருதுகிறது" என்பது ஆசிய ஆயர்களின் கருத்து. இந்த நிலையை மாற்றியமைக்க நம்மை அழைக்கும் ஆசிய ஆயர்கள் சொல்வது இதுதான். "கடவுளின் தாயாம் மரியாள் ஒரு பெண். இறையாட்சி இம்மண்ணில் மலர்ந்திட அவர் இயேசுவோடு சிறப்பான விதத்தில் சேர்ந்து உழைத்தார். உலக மக்கள் தொகையில் பாதியான பெண்மை அங்கீகரிக்கப்பட்டு, அதன் மாண்பு மீண்டும் புத்துயிருடன் மீட்புப் பெறவேண்டும் என்பது மனிதத் தேவை மட்டுமல்ல, இயேசு தந்த நற்செய்தியின் கட்டளையுமாகும்."

### இயேசுவும், நற்செய்தியும், பெண்களும்!

பெண்களின் வளர்ச்சிக்காக, மேன்மைக்காக, அவர்களின் முழு விடுதலைக்காக உழைக்கும் யாவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருப்பவர் இறைமகன் இயேசுகிறிஸ்து. அவர் வாழ்ந்த காலத்தில் பெண்கள் மனிதர்களாகவே கருதப்படவில்லை. ஆண்கள் தாங்கள் பெண்களாகப் பிறவாததற்காக இறைவனுக்கு நன்றி சொல்லிய காலம் அது. பெண்களின் சாட்சியங்கள் நீதிமன்றங்களில் செல்லுபடியாகாது. சமூகத்தில் பாவத்திற்குக் காரணம் பெண்தான் என்று பலர் சொல்லி வந்த காலம் அது.

இத்தகைய சமய - சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக தனது நிலைப்பாட்டை எடுத்தார் இயேசு. யூதனாகிய அவர் சமாரியப் பெண் ஒருவரோடு பேசினார் (யோவா 4:5-42). கல்லால் எறிந்து கொல்ல வந்த ஒரு பெருங் கும்பலிடமிருந்து ஒரு பெண்ணை இயேசு பாதுகாத்தார் (யோவா 8:3-11) மேலும், தனது சொத்து முழுவதையும் மருத்துவரிடம் செலவழித்தும் எவராலும் தன்னை குணமாக்க முடியாத நிலையில் தன்னைத் தொட்டதால் முழுவதும் நலம்பெற்ற பெண்ணின் நம்பிக்கையை இயேசு பெரிதும் வாழ்த்தினார். "மகளே, உனது நம்பிக்கை உன்னை நலமாக்கியது. அமைதியுடன் போ" (லூக் 8:43-48). பெண்ணுக்கு நலமளித்தார். (மாற் 1:31) பெண்ணைப் பாராட்டினார். அவரின் நம்பிக்கைக்கு உடல்நலத்தைப் பரிசாகத் தந்தார். தங்களின் குழந்தைகளோடு தன்னைச் சந்திக்க வந்த பெண்களை அவர் வரவேற்றார். அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தார் (மாற் 14:3-9). அவ்வுரிமைகளைப் பறித்தவர்களுக்கெதிராக போர்க்கொடி உயர்த்தினார் (மாற் 12:40).

இத்தகைய இயேசுவின் பிரசன்னமும், அவரின் வலிமைமிக்க ஆவியும் இன்றும் பல ஆண்கள் மற்றும் பெண்கள் மூலமாக பெண்களின் நலனுக்காக மற்றும் முழு விடுதலைக்காக புதிய சமய - சமூகச் சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்கள் ஒடுக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் இயேசுவின் சிந்தனைகளும், போதனைகளும், வாழ்வும் மாபெரும் சவால்களாக உள்ளன. அகில உலகப் பெண்கள் தினத்தன்று பெண்களின் உயர்வுக்காக, உரிமை வாழ்வுக்காக உழைத்த இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்திட உறுதி பூணுவோம்.

முடிவாக...

ஒருமுறை பேருந்தில் ஒரு பெண் நடத்துனதிடம் "மீதிப்பணத்தைத் தாருங்கள்" என்றார். நடத்துனர் "பிறகு தருகின்றேன்" என்றார். கொஞ்ச நேரத்திற்குப் பின் அப்பெண் மீண்டும் நடத்துனரிடம் "எனது மீதிக்காசை தாருங்கள்" என்றார் "கொஞ்சம் பொறுங்கள், பிறகு தருகின்றேன்" என்றார்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# சிலுவைப்பாதை விசுவாசமா? கடமையா?



இயேசு கிறிஸ்துவின் தீர்ப்பு முதல், அவரது இறப்பு வரை தியானிப்பதே சிலுவைப்பாதையாகும். இயேசுகிறிஸ்து எவ்வாறு துன்பப்பட்டார். வேதனைக்கு உட்படுத்தப்பட்டார் என்பதைக் கூறுவதும், சிலுவைப்பாதையாகும். அவர் பட்ட பாடுகள் அனைத்தும், நமக்காக நம் அனைவரின் பாவங்களுக்காக அவர் நமக்காக நொறுக்கப்பட்டார். முள்முடி ஏற்றுக்கொண்டார். சிலுவையைச் சுமந்தார். குருதி சிந்தினார். மேலும் ஆணி காயங்களை ஏற்றுக்கொண்டு தமது உயிரையே நமக்காக நம் பாவங்களுக்காக சிலுவையில் பலியாகத் தந்தார்.

இதுவே நாம் அறிந்த சிலுவைப்பாதை இதனையே நாம் காலங்காலமாக சிந்தித்து வருகின்றோம்.

### இயேசு பட்ட பாடுகள் எதற்காக?

இயேசு கிறிஸ்து பாடுபட்டது தமது தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தந்தை தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பியதன் நோக்கம், நமது பாவங்கள் துடைக்கப்பட வேண்டும் என்பதற்கே. அன்று இயேசு சுமந்த பாரமான சிலுவை. வெறும் சிலுவை அன்று, அது நாம் அனைவரும் செய்த பாவம். அவரை மும்முறை நிலத்தில் விழச் செய்தது, சிலுவையின் பாரமன்று நாம் அனைவரும் செய்த பாவத்தின் பாரம்.

அன்று இயேசு கிறிஸ்து நம்மை கொலை, கொள்ளை, காம உணர்ச்சி, பொய்மை, பிற உயிர்களை மதியாமை போன்ற கொடூரமான பாவங்களிலிருந்து தம்முடைய புனிதமான இரத்தத்தைச் சிந்தி, அதன் வழியாக நம்மைக் கழுவித் தூய்மையாக்கினார். அவர் பட்ட பாடுகள் அனைத்தும் நமக்காகவே.

### நாம் வாழ்கின்ற வாழ்க்கை

ஆனால் நாம் இப்போது இதனை உணர்ந்து பார்ப்பது கூட இல்லை. இயேசு கிறிஸ்து பட்ட பாடுகள் அனைத்தும் யாருக்கோ என்ற நினைப்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏதோ தவக்காலத்தில் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் சிலுவைப் பாதைக்குச் செல்லுகின்றோம். சடங்கிற்காக, கடமைக்காக நான் சிலுவைப்பாதைக்கு செல்லுகின்றோம். இதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. சிலுவைப்பாதை நிலைகளை தியானித்து அப்பாவங்களை இனிமேல் செய்யக்கூடாது என்ற மனநிலையை உருவாக்க வேண்டும். பேராசை, பண ஆசை, பாவ வாழ்க்கை, சுயநலம், பதவி மோகம், அன்பின்மை, பொறாமை, காட்டிக் கொடுத்தல், மறுதலித்தல் போன்ற பாவக் கறைகளை களைந்தெறிந்து அதிலிருந்து வெளிவர வேண்டும். சிலுவைப்பாதையின் ஒவ்வொரு நிலைகளையும் தம் சொந்த அனுபவங்களோடு இணைத்து பார்த்து தியானிக்க வேண்டும். ஒவ்வொருவரும், பிறரை, தன்னைவிட தாழ்வானவன் என்று தீர்ப்பிடும்பொழுது நாம் இயேசுவையே தீர்ப்பிடுகின்றோம். ஒவ்வொரு முறையும் நாம் பாவத்தில் விழும்போது நாம் இயேசுவையும் சேர்த்து மண்ணில் விழ வைக்கின்றோம்.

பாவம் என்று தெரிந்தும், அதனை செய்யும்பொழுது இயேசுவை நாம் கசையினால் அடிக்கின்றோம். இவ்வாறாக நாம் பாவம் செய்யும்போது இயேசுவை கிழே விழச் செய்து, சாத்தானை, அதன் ஆதிக்கத்தை எழச் செய்கின்றோம்.

### விசுவாசத்தோடா? கடமைக்காகவா?

இன்று நாம் மேற்கொள்ளும் பக்தி முயற்சிகள் விசுவாசத்துடன் இருக்கின்றனவா? என்பதைக் கூட அறியாத நிலையில் இருக்கின்றோம். கடமைக்காக செய்கின்றோம். "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்று பாடும் நாம் அதனை மறந்துவிட்டு மண்ணுக்கே திரும்பிச் செல்லும், இந்த உடலால் பல் பாவங்களைச் செய்து அன்று இயேசு தம் உதிரத்தால் கழுவிய பாவங்கள் இன்று மீண்டும் மேற்கொள்கின்றோம். விசுவாசம் இவ்வாறு மனமாற்றமின்றி எதனைச் செய்தாலும் அது வீணே!


**எனக்காகவோ தேவா எனக்காகவோ**
**சிலுவையில் சிதறுண்டாய் எனக்காகவோ**

என்று கேள்வியைக் கேட்டு கொண்டு, அதனை வாழ்வாக்காமல் பிறருக்காக நான் வாழாமல் இருந்தால் அது வீணே.

**"இரத்த வியர்வை சிந்தி எனக்காய்**
**நொந்து அழுத நல்ல இயேசுவே"**

என சொல்லிக்கொண்டு பிறரின் துன்பத்தில் பங்கு கொள்ளாமல் வாழ்தல் இதுவும் வீணோ?

எனவே சிந்தித்து, விசுவாசத்தோடு சிலுவைப்பாதை செய்து அர்த்தமுள்ள தவக்காலத்தில் வாழுவோம்.



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 8வது ஞாயிறு (03.03.2019)

### ▶▶ பேதுரு ◀◀

**வாசக விளக்கம்:** மனிதன் பிறரிடம் எளிதாகக் குற்றம் காண்கிறான். ஆனால் தன்னிடம் உள்ள குற்றம் குறைகளை ஏற்க மறுக்கின்றான் நாமும் நலமுடன் வாழவேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களும் வளமுடன் வாழவேண்டும் என்று விரும்புகின்ற இயேசு நாம் குருடர்களாக வாழ்கின்றோமா இல்லை பார்வையுள்ளவர்களாய் வாழ்கின்றோமா என்று நம்மையே சோதித்துப் பார்க்க அழைக்கின்றார். இன்றைய வாசகங்கள் பிறரைத் தீர்ப்பிடாமல் புரிந்து கொள்வது எது நிலையானது எது நிலையற்றது என்பதோடு தினமும் சுய ஆய்வு நம் குறைகளை இனங்கண்டு திருத்திக் கொள்ளும் புனித வழியைக் காட்டுகிறது. குயவரின் கலன்களைச் சூழையில் பரிசோதிப்பது போல நமது எண்ணங்களை நாம் பரிசோதித்துப் பார்த்த பிறகு நாம் உலக முன்னேற்றத்திற்கு பாடுபட முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். இயேசு விரும்புவது போலப் பிறரிடம் குற்றம் காண்பதை தவிர்த்து நம்மிடம் உள்ள குற்றங்குறைகளை ஏற்றுக்கொண்டு வாழ முன்வருவோம். ஏனெனில் உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.

**முதல் வாசகம் : சீ.ஞா 27:1-7**
பேசுவதற்கு முன்பே மனிதரைப் புகழாதே

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 15:54-58**
இயேசுவின் வழியாக வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! வாழ்வின் வார்த்தையைப் பற்றிக் கொள்ளுங்கள். உலகின் ஒளிரும் சுடர்களாகத் துலங்குவீர்கள் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 6:39-45**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

என்றும் கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் தூய திருஅவைக்கும் அதன் தலைவரான திருத்தந்தைக்கும், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் திருஅவை ஊழியர் ஆகிய அனைவருக்கும் உமது அருளாசியை வழங்கி இவர்கள் அனைவரும் இறைவார்த்தைப் பணியில் சிறந்து விளங்கிட வரமருள வேண்டுமென்று...

இயேசுவே கடவுளின் வார்த்தையாக இருக்கின்றார். அவரே கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் தூதுவராகவும் இருக்கின்றார். அவரின் வருகையே கடவுளின் வார்த்தையை அறிவிப்பதாக அமைந்திருக்கிறது. இதை நன்கு புரிந்து கொண்டவர்களாக நாமும் நமது வார்த்தையில் கடவுளை அறிவிப்பவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

மனிதன் பிறரிடம் எளிதாகக் குற்றம் காண்கிறான். ஆனால் தன்னிடம் உள்ள குற்றம் குறைகளை ஏற்க மறுக்கின்றான். இதை உணர்ந்தவர்களாக நம் சகோதர, சகேதரிகள் மீது குற்றம் காணாமல் எமது குற்றங்களை இனங்கண்டு திருந்தி வாழவும் நம்முடைய வார்த்தையிலே பேச்சிலே மற்றவர்கள் இயேசுவைக் காண வழிகாட்டிகளாக வாழ வரமருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 1வது ஞாயிறு (10.03.2019)

**வாசக விளக்கம்:** மனமாற்றத்தின் பொற்காலம் எனக் கருதப்படும் தவக்காலத்தை தொடங்கும் நமக்கு "நீரே என் புகலிடம் என் அரண் நான் நம்பியிருக்கும் இறைவன் நீரே" என்ற திருப்பாடல்வரிகள் நம்பிக்கையூட்டுகின்றன. நம்முடைய அன்றாட வாழ்வில் எண்ணிலடங்காச் சோதனைகளைச் சந்திக்கின்றோம். மாறிவரும் முன்னேற்றத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப புதிய புதிய சோதனைகள் வருகின்றன.இயேசுவுக்கு வந்தது சாதாரண சோதனைகள் அல்ல மாறாக அவர் எதற்காக இவ்வுலகிற்கு வந்தாரோ அதையே விட்டு விலகவைக்கக் கூடிய சோதனைகள் இயேசுவோ அதில் வெற்றி கண்டார். அருளின் காலமாகிய இத்தவக்காலத்தில் நாம் சோதனைகளில் வெற்றிபெற வேண்டுமாயின் பற்றற்றவரை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் செபத்தில் நிலைத்திருக்க வேண்டும். எமது வாழ்க்கைப் பயணத்தில் செபமே அச்சாணியாக இருக்கவேண்டும். இதற்காக மனவலிமையைப் பெற்றிட அருள் வேண்டிப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : இ.ச 26:4-10**
தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினத்தின் விசுவாச அறிக்கை

**பதிலுரைப் பாடல் :**
துன்ப வேளையில் என்னோடு இருந்தருளும் ஆண்டவரே

**இரண்டாம் வாசகம் : உரோ 10:8-13**
கிறிஸ்துவில் விசுவசிக்கிறவனுக்குரிய விசுவாச அறிக்கை.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல மாறாக, கடவுளின் வாய்ச் சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

**நற்செய்தி வாசகம் : லூக் 4: 1-13**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.


அருளின் காலமான தவக்காலத்தை நமக்குத் தந்துள்ள திருஅவைக்காக மன்றாடும். அன்புத் தந்தையே இறைவா! மனமாற்றத்தின் காலமான தவக்காலத்தை எமக்குத் தந்து எமது வாழ்க்கையில் மாற்றம் காண விழையும் திருஅவையையும் அதன் தலைவராக திருத்தந்தை ஆயர்கள் அருட்பணியாளர், துறவியர் திருஅவை மக்கள் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்துக் காத்தருள வேண்டுமென்று...

நாட்டிற்காகவும், நாட்டின் தலைவர்களுக்காகவும், மக்களுக்காகவும் மன்றாடுவோம். இரக்கத்தின் ஊற்றே அன்பிறைவா! நாட்டின் வளங்களையும் மக்களின் நலன்களையும் சூறையாடும் சுயநலப் போக்குள்ள தலைவர்கள் மனம் மாறவும் மக்களின் நல்வாழ்வுக்காக இன, மத, மொழி வேறுபாடுகளை கடந்த பொதுத்தன்மையுடன் பணியாற்றவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அனைவரும் இணைந்து பணியாற்றவும் வரமருள வேண்டுமென்று...

மக்களின் மனமாற்றத்திற்காகவும் ஆன்மீக வாழ்விற்காகவும் மன்றாடுவோம். கிறிஸ்தவ மக்களாகிய நாம் அனைவரும் உலகப்போக்கிலான வாழ்க்கை முறைகளை களைந்து, ஆடம்பரம் பொழுதுபோக்கு போன்றவற்றை தவிர்த்து தடைகளைத் தாண்டி இறைவனை நாடி வாழவும், உயிருள்ள இறைவார்த்தையின் துணைகொண்டு கடவுளின் அன்புறவில் வளரவும் வரமருள வேண்டுமென்று...

# விவிலிய வாசிப்பு

# பழைய ஏற்பாடு




### III. சூழல் சார்ந்த பொருள்கோள் முறை விளக்கம்

விவிலியத்தின் முதல் நூலாம் தொடக்க நூல் இறுதி நூலாகிய திருவெளிப்பாடு ஈறாக இயற்கையை, சூழலைப் பற்றிய பகுதிகள் பல இருந்தாலும் (காண். திபா 8, 19,136,148, நீ.மொ 8: 22-31, யோபு 38) இவண் நாம் தொடக்க நூலில் சூழல் பற்றிய சிந்தனைகள் அடங்கியுள்ள, அதிலும் குறிப்பாக வரலாற்றில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு இயற்கைச் சீர்கேட்டிற்கு வழிகோலிய சில பகுதிகளை மட்டும் ஆராய முயல்வோம்.

### மானிடர் இயற்கையை ஆளுதல்.

உலகைப் படைக்கின்றபோது கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கி (தொ.நூ 1:25), பின்வருமாறு கூறுகின்றார். அவர்கள் (மானிடர்) கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும் கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும், ஆளட்டும் என்றார் (தொ.நூ 1:26) மேலும் மானிடருக்கு ஆசி அளித்து பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என்றார். (தொ.நூ1:28) இங்கு ஆளட்டும் என்னும் வார்த்தையின் உண்மைப் பொருள் என்ன? விவிலியத்தில் ஆள்தல் என்பதன் அர்த்தம் என்ன என ஆய்வது அவசியம்.

இப்பகுதி இறைவன் மானிடரைப் படைப்பதற்கு முன்பாக இறைவன் தனக்குள் செய்கிற ஆலோசனையாக அமைகின்றது. இறைவன் மானிடரை தம் உருவிலும், தம் சாயலிலும் உண்டாக்க முயல்கிறார் (தொ.நூ 1:26). அவ்வாறு இறைச்சாயலில் உருவில் படைக்கப்பட்ட மனிதர்தான் இந்த இயற்கையை ஆள வேண்டும் என்று பணிக்கிறார், விரும்புகிறார். எனவே இந்த ஆளுகை என்பது ஆள்வதற்காக, அடக்கி ஆட்சி செய்வதற்காக அளிக்கப்பட்டது அல்லது, மாறாக மானிடர் ஒருவகையான பதில் ஆளுநராக, அரசப் பிரதிநிதியாக (Viceroy) ஆள வேண்டியவர். அவர்கள் பொறுப்புள்ள மேலாளராக, கண்காணியாக (Responsible Steward) இன்னும் சொல்லப்போனால் ஒரு நல்ல ஆயனாக (Shepherd) இறைவனுக்குப் பதிலாய் இருந்து ஆள வேண்டியவர்கள். எனவே இந்த ஆள்கை அழிப்பதற்கும் கொல்வதற்கும் அளிக்கப்பட்ட ஆளுகை அல்ல.

இஸ்ரயேலின் ஆட்சி, ஆள்தல் என்பது மெசப்பொத்தோமியா, எகிப்து ஆகிய கலாச்சாரங்களில் உள்ளது. போலன்றி சற்று வித்தியாசமானது. பிறநாடுகளைப் போல இஸ்ரயேலின் அரசன் குடிகள் மீது முழு அதிகாரமும் கொண்டிருக்கவில்லை. இங்கு உண்மையில் ஆள்பவர் என்பது கடவுளே. அரசர்கள் என்பவர்கள் அந்தக் கடவுளுக்குப் பதிலாளியாய், கண்காணியாய் ஆட்சி செய்கின்றனர். இது இஸ்ரயேலர் தங்களுக்கு அரசன் வேண்டும் என்று கேட்ட பகுதியில் (1சாமு 8) தெளிவாகிறது. எனவே இஸ்ரயேலில் ஆள்வது என்பது ஏகபோக உரிமைகளுடன் ஆள்வது அல்ல. மாறாக அது இறைவனுக்குப் பதிலாளியாய், இறைவன் இடத்தில் இருந்து ஆள்வது. அது ஒரு கடமை, பொறுப்பு, பணி சேவையே அன்றி அதிகாரம் அல்ல.

இந்தப் பதிலாளியாய் ஆளும் கருத்து இன்னும் குறிப்பாக தொ.நூ 2:5இல் தெளிவாகியது. ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டு வந்து குடியிருக்கச் செய்தார் (தொ.நூ 2:15) என்று விவிலிய ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே இந்த உலகம் ஏதேன் தோட்டம் போல இறைவனின் உரிமை, இறைவன் உரிமையாளராக உலா வரும் (தொ.நூ 3:8) புனித பூமி, புண்ணிய பூமி. அதில் மனிதன் இறைவனுக்குப் பதிலாய், கண்காணியாய், அதைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் அனுப்பப்பட்ட ஆண்டவரின் பணியாள். இதுதான் சூழுலை ஆளுதலின் உண்மைப்பொருள். இதைத்தான் நோவா செய்தார். மண்ணுலகெங்கும் அவற்றின் (விலங்குகள், பறவைகள்) இனங்கள் உயிர்பிழைத்துக் கொள்வதற்காக (தொ.நூ 7:3) அவற்றை அவர் தன்னுடன் பெட்டகத்துள் ஏற்றிக் காப்பாற்றினார்.

### பலுகிப்பெருகி ஆற்றலுக்கு உட்படுத்துதல்

இந்தப் பகுதியின், குறிப்பாக ஆற்றலுக்கு உட்படுத்துதலின் உண்மைப் பொருளை விவிலியத்தின் பிற்பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறிப்பாக இஸ்ரயேலர் கானான் நாட்டை உரிமையாக்கிய பகுதிகளோடு நோக்கும் பொழுது தெளிவாய் விளங்குகிறது. ஆற்றலுக்கு உட்படுத்துதல் என்பது இஸ்ரயேலின் விடுதலை வரலாற்றில் ஒரு சிறப்புப் பெயர் பெற்றது. எண்ணிக்கை நூல் இதை இவ்வாறு விளக்குகிறது. மோசே அவர்களிடம் கூறியது. உங்களில் போர்க் கலந்தாங்கியோர் ஒவ்வொருவரும் ஆண்டவர் முன், அவர் தமக்கு முன் எதிரிகளை விரட்டி அடிக்கும் மட்டும், யோர்தானைக் கடந்து சென்றால் - நிலம் ஆண்டவர் முன்னிலையில் பணிந்தடங்கும். அதன் பின்பு நீங்கள் திரும்பி வருவீர்கள்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



**1. “உங்கள் ஆடைகளை அல்ல, மாறாக உங்கள் இதயங்களை கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பிவாருங்கள்”**
**(யோவேல் 2:12-18 முதல் வாசகம்)**

**2. கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று அழைக்கின்றார் புனித பவுல்**
**(2 கொரி 5:20, 6:2 இரண்டாம் வாசகம்)**

**3. செபம், நோன்பு, அறச்செயல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி இயேசுவின் போதனைகள்**
**(மத் 6:1-6, 16-18 நற்செய்தி)**

தவக்காலம் என்பது அருளின் காலம், மீட்பின் காலம். இக்காலத்தில் இறைவனின் அளப்பரிய அன்பை நினைத்து மனம் உருகவேண்டும். இறையாட்சியின் மதிப்பீடுகளை பின்பற்றாமல் வாழ்ந்ததற்காக மனம்வருந்த வேண்டும். மீட்பின் பாதையில் வாழ்க்கைப் பயணத்தை மீண்டும் தொடர உறுதி கொள்ளவேண்டும். இன்னுமொரு வகையில் சொல்லப்போனால்...



**அ**கப் புறத்தை அலச...
**ஆ**ண்டவனை நோக்க...
**இ**ழப்பை ஏற்க...
**ஈ**ந்து மகிழ...
**உ**றவைக் கொடுக்க...
**ஊ**ன் உடலை ஒடுக்க...
**எ**ளிமையை அறிய...
**ஏ**ற்புடையதைச் செய்ய...
**ஐ**யத்தை எதிர்கொள்ள...
**ஒ**றுத்தல் செய்ய...
**ஓ**லமிட்டு உரிமைகள் பெற...
**ஔ**வியம் ஒழிய...

மனமாற்றத்திற்காக நாம் சில தவ முயற்சிகளை மேற்கொள்வது வழக்கமானது. பழைய ஏற்பாட்டில் நோவா காலத்து பெருவெள்ளம் 40 நாட்கள் நீடித்தது மோசே நாற்பது நாட்கள் சீனாய் மலையில் தங்கி உண்ணா நோன்பிருந்து செபித்தார் (வி.ப.24:18). இறைவாக்கினர் எலியா நாற்பது இரவும் பகலும் உண்ணாமலேயே நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார் (1 அர 19:8). யோனாவின் போதனையை கேட்டு மனந்திரும்பிய நினிவே மக்கள் கடும் தவம் மேற்கொண்டனர் (யோனா 3:1). நம் ஆண்டவர் இயேசு பாலைவனத்தில் நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்து தவம் செய்தார் (மத் 4:2).

ஆக 40 என்ற குறியீடு ஒரு முக்கிய நிகழ்வுக்கு ஆயத்தம் செய்யும் காலமாக கணிப்பிடப்பட்டது.

இப்பின்னணியிலேயே நாற்பது நாட்கள் தவமுயற்சி செய்யும் மரபு திருச்சபையில் தோன்றியது. இது பாஸ்கா விழாவை தகுந்த முறையில் கொண்டாட நம்மைத் தயாரிக்கின்றது. மேலும் உயிர்ப்பு திருநாளுக்கு, ஆரம்பத்தில் மூன்று நாட்கள் தான் தயாரிப்புக்கள் நடந்தன. காலப்போக்கில் 40 நாட்கள் தயாரிப்பு நாட்களாக உருவாகின. அந்த விதத்தில் ஆதித்திருச்சபையில் உயிர்ப்பு பெருவிழாவின் போது திருமுழுக்கு பெறும் நபர்களுக்கு 40 நாட்கள் தீவிர தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து திருமுழுக்கு பெற்றவர்களும், தங்கள் திருமுழுக்கு வார்த்தைப்பாட்டை புதுப்பித்துக் கொள்ளும் நோக்குடன் தவக்காலத்தில் தயாரிப்புக்களை மேற்கொண்டனர்.

## திருநீற்றுப்புதன் :

தொடக்கக் கால திருஅவையின் மரபைத் தொடர்ந்து ஏறக்குறைய 5ம் நூற்றாண்டில் இயேசுவின் உயிர்த்தெழுதல் திருவிழா மைய இடம் பெற்றிருந்தது. அக்கால வழக்கப்படி தலையான பாவம் செய்தவர்கள் கடவுளோடும் திருஅவையோடும் மீண்டும் நல்லுறவு கொண்டு வாழ தயாரிப்புக் காலமாக ஆறு வாரங்கள் ஒதுக்கும் மரபு உருவானது. கடினமான ஒறுத்தல் முயற்சியை தவக்காலத்தின் தொடக்கத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். இந்த ஒறுத்தல் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கென நோன்பு உடைகொடுத்து மற்றும் சாம்பல் தெளித்து திருச்சபையில் இருந்து விலக்கி வைக்கும் பழக்கம் இருந்தது.



ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 40 நாட்கள் நோன்பிருக்க வேண்டும் என்ற ஆசையால் நோன்பு இருக்கும் வழக்கம் திருநீற்று புதன்கிழமையிலிருந்து ஆரம்பமானது. ஏனென்றால் தவக்காலத்தில் வரும் ஞாயிறு தினங்களில் நோன்பு கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே இப்புதன்கிழமை தவக்காலத்தின் தொடக்கமாக கருதப்பட்டது. திருநீற்றுப் புதன் இறைவார்த்தை பகுதிகள்

இவ் இறைவார்த்தைகள் தவக்கால தயாரிப்புக்கு உதவியாக உள்ளன.

## தவக்கால ஞாயிறு தினங்கள்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம் வழங்கிய நெறிமுறைகளுக்கு ஏற்ப தவக்கால ஞாயிறு தினங்கள் ஒப்புரவு மற்றும் திருமுழுக்கு ஆகிய இரு தவக்காலப் பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. இதனை மையமாகக் கொண்டே ஞாயிறு தினங்களுக்குரிய வாசகப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1ம், 2ம், 6ம் ஞாயிறு தினங்களின் தொடக்கவுரைகள் நற்செய்தியோடு தொடர்புடையதாக அமைந்துள்ளன. 3ம், 4ம், 5ம் ஞாயிறு தினங்களின் தொடக்கவுரைகள் முதலாம் ஆண்டு நற்செய்தியோடு தொடர்புடையதாக அமைந்துள்ளன. சமாரியப் பெண், பிறவியிலே பார்வையற்றவர், லாசர் ஆகியோர் தவக்கால பண்புகளை



நினைவுபடுத்துகிறார்கள். சமாரியப் பெண் நம்பிக்கையை தேடுகிறார், பிறவியிலே பார்வையற்றவர் பார்வை பெறுகிறார், லாசர் புது வாழ்வு பெறுகிறார். இவர்களது விசுவாச அனுபவங்களும் கிறிஸ்துவுக்குள் அவர்கள் பெற்ற இறையறிவும் திருமுழுக்கு பெற தயாரிப்போருக்கும் ஏற்கனவே திருமுழுக்கு பெற்றோருக்கும் முக்கியமான முன்மாதிரிகளாக அமைகின்றன. கிறிஸ்தவ மரபில் ஞாயிறு தினங்கள் நோன்பு நாட்களாக கணக்கிடப்படுவதில்லை.

## தவக்காலத்தின் வார நாட்கள்

தவக்காலத்தின் வார நாட்களின் இறைவார்த்தைப் பகுதிகள் மனமாற்றத்தின் ஊடாக ஒப்புரவையும், திருமுழுக்கையும் வலியுறுத்துகின்றன. திருப்பலிக்கான மன்றாட்டுக்கள் தனித் தனியாக தரப்பட்டுள்ளன.

## இத் தவக்காலம்...

நமது மனிதத்தன்மையை, மனித மாண்பை உயிர் பெற்று எழச்செய்ய சமூகக் காரியங்களில் அக்கறைக்காட்டுவோம். இம்முறையும் நிறையவே





**அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து. அமதி**

தவமிருப்போம், அனாவசிய செலவுகளை தவிர்ப்போம். Re-load செலவைக் குறைப்போம். பணத்தை மீதப்படுத்தி ஏழைகளோடு பகிர்ந்து கொள்வோம். ஈற்றிலே இத்தவக்காலம் என்னை புதுவாழ்வுக்கு அழைக்கின்றது என்பதை மறவாமல் அவ்வழைப்புக்கு செவி கொடுக்க தடையாய் இருக்கும் அனைத்தையும் தகர்த்தெறிவோம். இறைவனோடு, அயலானோடு, இயற்கையோடு, என்னோடு ஒப்புரவாகிடுவோம். அர்த்தமுள்ள உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் இயேசுவின் சாட்சிகளாய் மாறுவோம்.

இந்த தவக்காலம் அருளின் காலமாக புதுவாழ்வின் காலமாக அமைய இன்று தொடங்கி இயேசுவின் பாடுகள், மரணம் என்பன பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் கூறும் நிகழ்வுகளின் தொகுப்புக்களை கிரமமாக நாள்தோறும் படித்து தியானிக்க போகின்றோம். இப்பயிற்சியின் மூலம் தவக்காலத்தின் நிறைவில் இயேசுவின் பாடுகள், மரணம், இவற்றோடு சம்பந்தப்பட்ட நபர்கள், நிகழ்வுகள் அனைத்தும் பற்றி ஓரளவு பரிச்சயம் ஏற்படும். இல்லத்தில் இருந்து கொண்டே விவிலியம் படித்து, இயேசுவைப் பற்றி அறிய இது ஓர் அரிய சந்தர்ப்பம் ஆக அமையட்டும். மேலும் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்போடு இணைந்து அதை அர்த்தமுள்ளதாக அமைக்க முயல்வோம். பயன்படுத்துங்கள் பயன் பெறுங்கள்.

# ஆசைப்படுகிறேன்!

| திகதி | இறைவார்த்தை பகுதி | நாளாந்தம் செயல்படுத்த வேண்டியவை |
|---|---|---|
| 06.03.2019 | யோவான் 12:20-36 | இத்தவக்காலத்தை பயனுள்ள விதத்தில் செலவிட முடிவெடு |
| 07.03.2019 | யோவான் 12:44-50 | இறைவார்த்தை வாசிப்பதில் உறுதியாய் இரு |
| 08.03.2019 | மத்தேயு 26:1-5 | கோபம் கொள்ளாதே பொறுமையாய் இரு |
| 09.03.2019 | யோவான் 12:1-8 | நோயாளர்களுக்காக மன்றாடு |
| 11.03.2019 | லூக்கா 22:3-6 | நன்றி சொல்ல பழக்கப்படுத்திக் கொள் |
| 12.03.2019 | லூக்கா 22:7-14 | தொலைக்காட்சி பார்ப்பதை இன்று தவிர்த்துக்கொள் |
| 13.03.2019 | யோவான் 13:1-20 | துன்புறுத்துவோர்க்காக செபி |
| 14.03.2019 | யோவான் 13:21-30 | உன் பகையாளியை மன்னி |
| 15.03.2019 | லூக்கா 22:15-20 | பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களுக்காக மன்றாடு |
| 16.03.2019 | லூக்கா 22:24-30 | தொழில் வாய்ப்பின்றி கஷ்டப்படுவோர்காக மன்றாடு |
| 17.03.2019 | யோவான் 13:31-35 | வறியோர்க்காக மன்றாடு |
| 18.03.2019 | மாற்கு 14:26-31 | இன்சொல் பேசு |
| 19.03.2019 | லூக்கா 22:35-38 | திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக செபி |
| 20.03.2019 | யோவான் 14:1-9 | இன்று கையடக்க தொலைப்பேசியை “off” பண்ணவும். |
| 21.03.2019 | யோவான் 14:10-14 | உன் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் துப்பரவாக்கு |
| 22.03.2019 | யோவான் 14:15-19 | உன் அயலவரின் துன்பத்தில் பங்கு கொள் |
| 23.03.2019 | யோவான் 14:20-24 | நாட்டில் நீதி நிலவ மன்றாடு |
| 24.03.2019 | மாற்கு 14:32-42 | பழிக்கு பழி வேண்டாம் உனக்கு |
| 25.03.2019 | மத்தேயு 26:47-56 | தாய்மார்க்காகவும், குழந்தைப் பாக்கியத்துக்காக ஏங்குவோர்க்காகவும் மன்றாடு |
| 26.03.2019 | யோவான் 18:2-11 | மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இரு |
| 27.03.2019 | யோவான் 18:12-16 | நோயுற்றவரை தரிசி |
| 28.03.2019 | யோவான் 18:18-23 | நாளுக்கு ஒரு வேளை குடும்பமான உணவு அருந்தவும். |
| 29.03.2019 | மாற்கு 14:53-61 | வீட்டில் குடும்பமாக திருமணித்தியாலம் செய்யவும் |
| 30.03.2019 | மாற்கு 14:61-65 | தந்தையர்க்காக மன்றாடு |
| 31.03.2019 | மத்தேயு 26:69-75 | சமூகப் பணியில் ஈடுபடவும். சமூகப் நலப் பணியில் உழைப்போர்க்காக மன்றாடு. |
| 01.04.2019 | மத்தேயு 27:3-10 | அனைத்து மனிதர்களையும் மதிக்க பழக்கப்படுத்திக்கொள் |
| 02.04.2019 | யோவான் 18:29-38 | அனைத்து தொழிலாளரையும் நன்றியோடு நினைத்து செபி |
| 03.04.2019 | லூக்கா 23:6-12 | உன்னைவிட மற்றவரை உயர்வாக நினை |
| 04.04.2019 | லூக்கா 23:13-17 | பல்வேறு தீய பழக்கங்களுக்கு உள்ளாகி இருப்போர்க்காக மன்றாடு |
| 05.04.2019 | யோவான் 18:39-40, 19:4-15 | அன்பியங்களில் ஒன்றுகூடி செயல்பட முடிவெடுக்கவும். |
| 06.04.2019 | மத்தேயு 27:24-26 | நம்மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழும் வரத்தைக் கேள். |
| 07.04.2019 | மாற்கு 15:16-19 | மன்னிப்பு கேட்க தயங்காதே |
| 08.04.2019 | மத்தேயு 27:27-30 | மன்னிப்பதில் வள்ளலாய் இரு |
| 09.04.2019 | லூக்கா 23:26-38 | பிறரை பழித்துரைக்காதே |
| 10.04.2019 | யோவான் 19:16-24 | குடும்பங்களின் நல்வாழ்வுக்காக மன்றாடு |
| 11.04.2019 | லூக்கா 23:35-43 | தீமையை நன்மையால் வெல்லவும் |
| 12.04.2019 | யோவான் 19:24-27 | இன்று குடும்பமாக திருச்சிலுவைப் பாதையில் பங்கேற்கவும். |
| 13.04.2019 | மத்தேயு 27:45-54 | துன்பங்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்ளும் மனஉறுதிக்காகச் செபிக்கவும் |
| 14.04.2019 | யோவான் 19:28-37 | இயேசுவிடம் உன்னை கையளி. |

## நோன்பு

இறுதியாக நோன்பு மற்றும் செபம் பற்றிய சில தெளிவுகள் செபமும் நோன்பும் இணைந்து செல்ல வேண்டும். செபமும் நோன்பும் இணைந்தே செல்லும். தவக்காலத்தில் நாம் வழமையைவிட சற்று அதிகமாக செபிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளோம். நமது நோன்பிற்கு வலுவூட்டுவது செபம். மாறிவரும் காலத்திற்கேற்ப நமது நோன்புகளும் மாறவேண்டும். தொலைக்காட்சி நோன்புஇ அலைபேசி நோன்புஇ சொல் நோன்பு போன்றன. எனது செபமும் நோன்பும் என்னை பிறரன்பில் வளரச் செய்யும் என்பதை புனித அகுஸ்தினார் மிக அழகாக கூறியுள்ளார்.

“இந்நாட்களில் ஈகையினாலும், நோன்பினாலும் வலுவூட்டப்படுகின்ற எங்கள் செபம் விரைவாக விண்நோக்கி எழுகிறது ”.

“நோன்பும், ஈகையும் என் செபத்திற்கு சிறகைப் போன்றது. எனவே எனது செபம் எளிதாக விண்ணகம் எழுகின்றது”.

மேலும் புனித பெரிய லியோ நோன்பின் இன்னுமொரு பரிமாணத்தைக் காட்டுவார்.

“நாம் ஒரு சந்தி அனுசரிப்பது உணவை தவிர்ப்பதற்காகவோ அல்லது உடல் சார்ந்த பிற தேவைகளை தவிர்ப்பதற்காகவோ மட்டுமல்ல. இவ்வித ஒறுத்தல் முயற்சிகள் பிறரை இழித்துரைக்கும் புற கூறுதலில் இருந்தும் ஏனைய தவறுகளிலிருந்தும் விலகி வாழத் தூண்ட வேண்டும்”.

“நோன்பு என்பது நமது உடல் பருமனை குறைப்பதில் அமைவதல்ல. மாறாக நமது ஆன்மாவை வளர்ப்பதே ஆகும்”

இந்த நாற்பது நாள்கள் நமக்கு ஒரு புதிய சிந்தனையையும் செயல்பாட்டையும் கொடுக்க நாம் சிறப்பாக பயணிப்போம். இறையாட்சி சமூகம் அமைப்போம்.

## பாவமும், மன்னிப்பும் பற்றி உமக்குத் தெரிய வேண்டியவை

- வானகத் தந்தைக்கு கீழ்ப்படிய மாட்டோம் என்று சபதமிட்ட லூசிபரும் அவரைச் சார்ந்தோரும் சாத்தான்களாய் மாறி நம் முதல் பெற்றோரை ஏமாற்றி, கீழ்ப்படியாமை என்ற பாவத்திற்குள் அவர்களையும் இழுத்தார்கள். இதனால் பிறப்பால் வரும் பாவம் மனிதருக்குள் நுழைந்தது.
- வானகத் தந்தைக்குக் கீழ்ப்படியாமை என்ற இப்பாவத்தின் விளைவால் காயீன் ஆபேல் வடிவில் தனி மனிதன் இன்னுமொரு தனி மனிதனுக்கு எதிரியானான்.
- வானகத் தந்தைக்குக் கீழ்ப்படியாமை என்ற இப்பாவத்தின் விளைவால் பெருவெள்ளத்தின் வடிவில் இயற்கையும் மனிதனுக்கு எதிரியானது.
- வானகத் தந்தைக்குக் கீழ்ப்படியாமை என்ற இப்பாவத்தின் விளைவால் பபிலோனிய (பாபேல்) கோபுர வடிவில் ஒரு சமூகம் இன்னுமொரு சமூகத்துக்கு எதிரியானது.
- பாவத்தை முற்றாக அழிக்க இறைமகன் மனிதனாய் பிறந்து, பாடுகள்பட்டு, இறந்து உயிர்த்து வானகத் தந்தையோடு அனைவரையும் ஒப்புரவாக்கினார். மீட்பரின் இறப்பே பாவத்தை அழித்தது.
- மீட்பர் தன் பாடுகள், இறப்பு, உயிர்ப்பால் நிறைவுசெய்த பாவத்தின் விடுதலையை மனிதர் முழுதாய் சுவைக்கவிடாது தடுக்க சாத்தான் தொடர்ந்து அவர்களைச் சோதித்து வருகிறான். இதற்கு நீரும் விதிவிலக்கல்ல.
- பாவத்தின் முதல் காரணமாய் இருப்பவன் சாத்தான். அவனைத் தங்களுக்குள் குடிகொள்ள இடமளிக்கும் மனிதர்கள் இரண்டாம் காரணர்களாள இருக்கின்றார்கள்.
- சாத்தானுக்கு இடமளிக்கும் மனிதர்கள் கொலை, விபச்சாரம், பரத்தமை, களவு, பொய், பழித்துரைத்தல், சிலைவழிபாடு, பில்லிசூனியம், பகைமை, சண்டை, பொறாமை, கோபம், தனிக்குழுப்போக்கு, பிரிவினை, குடிவெறி, களியாட்டம் (மத் 15:19-20, கலா 5:19-21) என்பவற்றில் ஈடுபடுகிறார்கள். இவற்றுக்கு இடமளித்தால் நீரும் பாவத்தில் விழுவது உறுதி.
- ஆணவம், பேராசை, பொறாமை, கோபம், மிதமிஞ்சிய உணவாசை, சோம்பேறித்தனம் என்பவையே எல்லாப் பாவங்களுக்கும் அத்திவாரங்களாய் இருக்கின்றன. இவற்றின் மட்டில் நீர் மிகவும் எச்சரிக்கையாய் இருந்து கொள்ளும்.
- தூய ஆவியாருக்கு எதிரான பாவங்களைத் தவிர மற்றைய எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டு. ஒருவேளை நீர் பாவத்தில் விழுந்தால், ஒப்புரவு அருட்சாதனத்தால் இம்மன்னிப்பை அடையக் காலம் தாழ்த்தாதீர். ஆண்டவரான இயேசுக்கிறிஸ்துவின் பெயராலும், வானகத் தந்தையின் தூய ஆவியாராலும், மன்னிப்பால் கழுவப்படும்போது நீர் தூயவர் ஆகிறீர் (1 கொரி 6:11)

தொடரும்

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

## இயேசு கூறும் வாழ்க்கை விதிகள்



- "கொலை செய்யாதீர், பிறரைக் கொலை செய்பவன் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாவான்" என்ற கட்டளையைக் கேட்டுள்ளீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், தன் சகோதரனிடத்தில் சினமுறுவோன் தண்டனை தீர்ப்புக்குள்ளாவான் (மத் 5:21)
- நீ கடவுளுக்கு காணிக்கை செலுத்தப் போகையில் உன் சகோதரன் உனக்கெதிராக மனத்தாங்கல் கொண்டிருப்பதாக உணர்ந்தால், உன் காணிக்கையைப் பீடத்தின் முன்னால் வைத்துவிடும். திரும்பிப்போய் உன் சகோதரனோடு சமாதானம் செய். பின்னர் வந்து காணிக்கையைச் செலுத்து. (மத் 5:23)
- "திருமணம் புரிந்தவர்கள் ஒருவர் ஒருவருக்கு உண்மை உள்ளவராய் இருக்கவேண்டும்" என்ற கட்டளையைக் கேட்டுள்ளீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வேறொரு பெண்ணையோ, ஆணையோ உள்ளத்தில் விரும்புகிறவர்கள் உண்மையற்றவர்கள் ஆவார் (மத் 5:27-28)
- "அயலானுக்கு அன்பு, பகைவருக்கு வெறுப்பு" என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள். உங்களுக்கெதிராகச் செயல்படுவோருக்கு நன்மை செய்யுங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் வானகத்திலுள்ள தந்தையின் மக்களாவீர்கள். அவர் நல்லோர் மீதும், தீயோர் மீதும் கதிரவனை வீசச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும், நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார் (மத் 5:43-45)
- பிறருக்குத் தீர்ப்பிடாதீர்கள். கடவுளும் உங்களுக்குத் தீர்ப்பிடமாட்டார். யாரையும் பழிக்காதீர்கள். கடவுளும் உங்களைப் பழிக்கமாட்டார். பிறருடைய குற்றங்களை மன்னியுங்கள். கடவுளும் உங்களை மன்னிப்பார். கொடுங்கள் கடவுளும் உங்களுக்குக் கொடுப்பார். (லூக் 6:37-38)

**செல்வி. H.M. டியோனி, தரம் 12, இராஜகிரிய.**




## விவிலியப் பகுதி



### மத்தேயு நற்செய்தி

**அதிகாரம் 1 முதல் 14 வரை**

46. ஏழையின் உள்ளத்தோர் நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படும்போது பெறும் பேறு என்ன?
47. விளக்கை ஏற்றி எதில் வைப்பதில்லை?
48. விளக்கை ஏற்றி எதில் வைப்பர்?
49. விண்ணரசில் பெரியவர் யார்?
50. யாருடைய நெறியை விட நமது நெறி சிறந்திருக்க வேண்டும்?
51. கொலை செய்பவர் எதற்கு ஆளாவர்?
52. உடல் முழுவதும் நரகத்திற்கு செல்வதைவிட மேலானது எது?
53. தன் மனைவியை விலக்கிவிடுகிறவன் எதை கொடுக்க வேண்டும்?
54. எவற்றை ஆண்டவருக்கு செலுத்த வேண்டும்?
55. எவ்வெவற்றின் மீது ஆணையிட கூடாது?
56. கடவுளின் அரியணை எது?
57. ஆண்டவரின் கால்மனை எது?
58. பேரரசின் நகரம் எது?
59. மிகுதியாக சொல்வது எதுவும் யாரிடமிருந்து வருகிறது?
60. யாரிடம் முகம் கோணக் கூடாது?

தொடரும்

விடைகள் 15ம் பக்கம்

## கண்டுபிடியுங்கள்!

**குட்டீஸ்!வழி கண்டுபிடிப்போமா?**







ஆண்டவர் நல்லவர்
அனைத்தையும்
படைத்தவர்
வானம் பூமி
யாவையும்
வண்ணமாக
படைத்தவர்
காற்றும் மழையும்,
ஒளியும் காரிருள்,
காடும் மலையும்
நீர்திரள்கள் யாவும்
நம் இறைவன் தந்த
படைப்புக்களை
போற்றிடு போற்றிடு
இறைவனை
மகிழ்ச்சியுடன்
போற்றிடு

**ஒஸ்வால்ட், தரம் 6, இராஜகிரிய.**



D. Shoffine Honorius, தரம் 2.



எனசா, தரம் 4, நல்லாயன் கன்னியர் மடம்.

**குட்டீஸ்! தவக்காலம் ஆரம்பமாகிறது. எனவே தவக்காலத்தில் என்ன தவ முயற்சிகள் மேற்கொள்ள இருக்கின்றீர்கள் என எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அல்லது தவக்காலத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை வரைந்து அனுப்புங்கள்.**

# மாணவர் ஒளி





# உன்னோடு ஒரு நிமிடம்

அந்த இரகசியத்தை மீண்டும் ஒருமுறை நான் உன்னோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நான் படைத்த அனைத்திலும் நீ தான் மிகச் சிறந்த அதிசயம், நீ தான் இந்த உலகத்திலேயே மிகச் சிறந்த அற்புதம்.

நீ பிறந்தபொழுது உன்னுடன் நான் பகிர்ந்து கொண்ட முதல் வார்த்தைகள் இவை. இன்று திரும்பவும் அதே வார்த்தைகளை உன்னுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

"நீ தான் எனது படைப்பின் அதிசயம். நீதான் என் அற்புத படைப்பு"

உன்னையே உனக்குப் பிடிக்காத பொழுது, உன்னையே நீ புறக்கணிக்கும்பொழுது, எண்ணும்போது, உன்னையே ஒரு பாவியாக எண்ணும்போது உன்னையே ஒன்றுக்கும் உதவாதவனாக எண்ணும் போது நான் கூறுவதை ஏற்றுக்கொள்வது உனக்குக் கடினமாகத் தான் இருக்கும்.

இந்த உலகில் நீ எனது உன்னத படைப்பு என்பதை உனக்கு நிரூபிக்க எத்தனை இறைவாக்கினர்களை, எத்தனை ஞானிகளை, எத்தனை புனிதர்களை, எத்தனை தூ துவர்களை உன்னிடம் அனுப்பியிருக்கிறேன் என ஒரு நொடி நினைத்துப்பார்.

மீண்டும் ஒருமுறை நானே நேரில் வந்து உன்னிடம் கூறுகின்றேன். "இந்த உலகில் நீ என் உயர்ந்த தாங்கி உனக்குச் சொல்லுகிறேன்! "நீ இந்த உலகில் எனது மேலான அற்புதம்"

எனது படைப்புக்கள் அனைத்தும் அதிசயங்களால் நிறைந்துள்ளன. நான் இருளிலிருந்து ஒளியை உருவாக்கினேன். நான் நீர்த்திரளுக்கு இடையில் வானத்தை உருவாக்கினேன். வானத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சூரியன், சந்திரன், விண் மீன்களை உருவாக்கினேன் உலர்ந்த தரையை உருவாக்கி, பூத்துக் குலுங்கும் மலர்கள், காய்த்து கனிந்த கனிகள், ஓங்கி உயர்ந்த மரங்கள், புற்பூண்டுகளையும், செடி கொடிகளையும் காடுகளையும் படைத்தேன்.

ஆகிய அனைத்தையும் நான் உருவாக்கினேன். நல்லவை என்று கண்டு அவற்றுக்கு என் ஆசியை வழங்கினேன்.

இறுதியாக எனது சாயலாக நான் உன்னை படைத்தேன். உனக்கு ஆசியும் வழங்கினேன்.

நான் படைத்த அத்தனையும் நல்லவைதான். நான் நல்லவனாய் இருப்பதால் என்னிடமிருந்து வருபவை அனைத்தும் நல்லவையே கெட்டவற்றை எதையும் நான் படைத்ததில்லை.

நான் ஒருபோதும் மதிப்பில்லாதவர்களைப் படைத்ததில்லை, நான் மனிதர்களைக் கெட்டவர்களாகவோ, உதவாதவர்களாகவோ, பயன்பாடில்லாதவர்களோ, தூய்மையற்றவர்-களாகவோ, படைப்ப-

## இன்று நான் உனக்குச் சொல்லுகிறேன்.

மறுபடியும் உன் தலைமீது என் கைகளை வைக்கிறேன். என் கையின் தொடுதலை

மறுபடியும் உணர்ந்து கொள்.

நீ பிறந்த அன்று நான் சொன்ன

உன்னையே ஒரு தோல்வியாகக் கருதும்பொழுது, உன்னையே ஒரு பயனில்லாத படைப்பாக

உன்னத அதிசயம்!"

இதை நான் இரண்டாம் முறையாக உன்னை எனது கரங்களில்

ஆகாயத்தில் சிறகடித்துச் செல்லும் பறவைகள், நீரில் பாய்ந்து செல்லும் கூடி வாழ் மீன்கள், நிலத்தில் மிருகங்கள்

தில்லை. என்னிடமிருந்து எது வந்தாலும் அது நல்லதாய் தான் இருக்கும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# விவிலியம் பற்றி

## விவிலியத்தில் அதிகாரம் வசனம், எப்படி வந்தன?

கண்டர்பரியின் பேராயர் ஸ்தேவான் கர்தினால் லாங்டன் (1150 - 1228) என்பவர் ஏறக்குறைய கி.பி 1214இல் விவிலிய நூல்களை அதிகாரங்களாகப் பிரித்தார். இவற்றைத் தவிர கர்தினால் கூகோ தே சாங்தோ காரோ என்பவர் (1244, 1248) விவிலியத்தை 2 விதிமுறைகளை அடிப்படையில் பிரித்தார். எனினும் இன்று நம் நடைமுறையில் ஸ்தேவான் கர்தினால் லாங்டன் முறையே உள்ளது.

கூகோ என்பவர் ஒவ்வொரு அதிகாரத்தையும், (பிரிவையும்) மூன்று பகுதிகளாகப் பிரித்தார். சாந்தஸ் பங்கினோ (1470 - 1541) என்ற டொமினிக் சபைத் துறவி கி.பி 1528இல் வெளியிட்ட விவிலியத்தில் ஒவ்வொரு அதிகாரத்தையும் வசனங்களாகப் பிரித்திருந்தார்.

பிறகு பிரான்ஸ் நாட்டு அச்சகத்தார் இராபர்ட் எஸ்டின் (1503 - 1559) என்பவர் விவிலியத்தில் பல பிரதிகள் வெளியிட்டார். பங்கினோ வெளியிட்டிருந்ததைப் பின்பற்றி வசனங்கள் இல்லாதவற்றிற்கு இவர் வசன எண்கள் கொடுத்தார். இராபர்ட் முதலாம் எடிசன் (இராபர்ட் ஸ்தேவான்) கி.பி 1532இல் "Thesaurus> Linguae & Latinae" என்பதை வெளியிட்டார். இது தவிர இரண்டு முறை ஒட்டுமொத்த எபிரேய விவிலியத்தையும், அதிகாரம் மற்றும் வசனங்களுடன் வெளியிட்டார். கி.பி 1546 - 1551ற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் நான்கு முறை கிரேக்க புதிய ஏற்பாட்டையும் வெளியிட்டார்.

**உங்களோடு ஆண்டவரைப் பேச விடுங்கள். உங்கள் வாழ்வு மகிழ்வால் நிறைவதைக் காண்பீர்கள்**

**கசப்பான உண்மைகளை வெளிப்படையாக சொன்னால் பல உறவுகள் பிரிந்து விடுவதால் தான் இனிப்பான பொய்களை பலபேர் அழகாக சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.**

**"தவக்காலம்" திருச்சபை நமக்குக் கொடுத்த ஓர் அரும் பெரும் கொடை.**

**"தவக்காலம்" ஒரு புதிய தொடக்கம்**

சாவின் மீது வெற்றிக் கொண்ட கிறிஸ்துவின் பாஸ்காவை நோக்கிய பாதை. இந்தத் தவக்காலம் நம்மை உடனடியாக மனம் மாற அழைக்கின்றது. தம் முழு உள்ளத்தோடு கடவுளிடம் திரும்பி வர காத்திருக்கும் காலம். ஆண்டவருடனான நட்புறவில் வாழ, கிறிஸ்தவர்கள் அழைக்கப்படும் காலம். தவக்காலமானது உண்ணா நோன்பு, செபம் மற்றும் தான தர்மம் செயல்கள் வழியாக நம் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்திக் கொள்ளும் காலம்.

இத்தவக்காலத்தில் இறைவார்த்தையைக் கேட்டு ஆழமாக தியானிக்க நாம் அழைக்கப்படுகின்றோம். அத்தோடு இக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய பரிமாணங்கள்.

- ✿ தேவையில் இருப்பவர்களுக்கு நம் கதவுகளை திறக்க வேண்டும்.
- ✿ நாம் சந்திக்கும் ஒவ்வொரு உயிரும், நம்முடைய அரவணைப்பிற்கும், மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய ஒரு கொடை என்பதை உணரவேண்டும்.
- ✿ பணத்தின் மீது ஆதிக்கம் செலுத்தாது அப்பணத்-தினால் மற்றவர்களுக்கு பணிவிடை செய்ய உதவும் கருவியாக இருக்கவேண்டும்.



# தவக்காலம்

இயேசுவே நானும் உம்மை உடலிலும் உள்ளத்திலும் சுமந்து ஆவேன் நாளும் ஒரு நற்கருணைப் பேழையாக

உம்மை என் இடைக்கச்சையாகும் நம்பிக்கை என் கேடயமாகும்.

நீதி என் மார்புக்க-வசமாகும். அமைதியின் நற்செய்தி மிதியடியாகும் கடவுளின் வார்த்தை போர்வாளாகும். மீட்பு என் தலைச்-சீராவாகும்.

இயேசுவே நானும் உம்மை உடலிலும் உள்ளத்திலும் சுமந்து ஆவேன் நாளும் ஒரு நற்கருணைப் பேழையாக

அன்பு எனது வார்த்தை-யாகும். பரிவின் செயல்கள் என் வாழ்க்-கையாகும். ஏழைகள் வாழ்வுப் பெறல் என் இலட்சியமாகும். இரக்கம் எனது இதயமாகும்.

இயேசுவே நானும் உம்மை உடலிலும் உள்ளத்திலும் சுமந்து ஆவேன் நாளும் ஒரு நற்கருணைப் பேழையாக

தியாகம் எனது பணிகளில் மிளிரும் தாழ்ச்சி எனது பார்வையில் ஒளிரும் எளிமை எனது கரங்களில் தவழும். பொறுமை எனது முகத்தை அலங்கரிக்கும். பிறரது கண்கள் என்னில் உம்மை காணும்.

இயேசுவே நானும் உம்மை உடலிலும் உள்ளத்திலும் சுமந்து ஆவேன் நாளும் ஒரு நற்கருணைப் பேழையாக

இதோ நானும் நாளும் ஒரு



# நடமாடும் நற்கருணை பேழையாக

நடமாடும் நற்கருணை பேழையாக வீட்டில், பங்கில், பாடசாலையில், சமூகத்தில் திகழ்ந்திடவே தூயன் இயேசு அழைக்கிறார். அவரை தாங்கி செல்லும் பேழையாக மாறிடத்தான் நாளும் நம்மை கேட்கிறார்.





# “திருஅவையில் சிறியோரின் பாதுகாப்பு” கூட்டம் மாசி 21 - 24, 2019

## “சிறியோரின் பாதுகாப்பு” கூட்டம் பற்றிய டிஜிட்டல் குறிப்பேடு

“திருஅவையில் சிறியோரின் பாதுகாப்பு” என்ற மையக்கருத்துடன், வத்திக்கானில் வியாழனன்று (21) தொடங்கிய ஒரு முக்கியக் கூட்டத்தைக் குறித்து அறிய விரும்பும் செய்தியாளர்களுக்கு உதவும் நோக்கத்தில், 42 பக்கங்கள் அடங்கிய குறிப்பேடு, டிஜிட்டல் வடிவில், மாசி 20, புதனன்று வெளியிடப்பட்டது.

“சிறியோரின் பாதுகாப்பு” என்ற கருத்தில் கூட்டம் நடைபெறுவதற்கு பின்னணி, இந்தக் கூட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முயற்சிகள், இக்கூட்டத்தில் பங்கேற்போர் குறித்த விவரங்கள், பொதுவாக, உலகெங்கும் சிறார் சந்திக்கும் கொடுமைகள் என்ற பல பகுதிகள், இந்த கையேட்டில் இடம் பெற்றுள்ளன.

திருத்தந்தைக்கு ஆலோசனை வழங்க உருவாக்கப்பட்டுள்ள கர்தினால்கள் அவையைச் சார்ந்தோர், 2018ம் ஆண்டு, புரட்டாதி மாதம் மேற்கொண்ட சந்திப்பில், இந்த முக்கியமான கூட்டத்தைக் குறித்து முதல் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று கூறும் இக்குறிப்பேடு, இதைத் தொடர்ந்து, இந்தக் கூட்டத்தின் பொறுப்பாளர்களை திருத்தந்தை நியமித்தது, ஆயர் பேரவைகளுக்கு அனுப்பப்பட்ட கடிதம் என்று, பல நிகழ்வுகள், பின்னணி தகவலாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தின் அனைத்து அமர்வுகளிலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தவறாமல் பங்கேற்பார் என்று கூறும் இவ்வேடு, இக்கூட்டத்தில் கலந்துகொண்ட 190 உறுப்பினர்களின் விவரங்களை வழங்கியுள்ளது.

உலகெங்கிலும் உள்ள 114 ஆயர் பேரவைகளின் தலைவர்களில், 18 பேர் ஆசியாவிலிருந்தும், 36 பேர் ஆப்ரிக்காவிலிருந்தும் 32 பேர் ஐரோப்பாவிலிருந்தும், 24 பேர் வட, மற்றும், தென் அமெரிக்காவிலிருந்தும் 4 பேர் ஓசியானாவிலிருந்தும் வருகை தந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் அல்லாமல், ஆண் துறவு சபைகளின் 12 உலகத் தலைவர்கள், பெண் துறவு சபைகளின் 10 உலகத் தலைவர்கள், திருப்பீடத்தின் உயர் அதிகாரிகள் 14 பேர், மற்றும் திருத்தந்தையால் சிறப்பான அழைப்பு பெற்றோர் என, 190 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு தயார் செய்யும் வகையில், ஒரு கருத்துக்கணிப்பு, அனைத்து மறைமாவட்டங்களுக்கும், அனுப்பப்பட்டதென்றும், 90 விழுக்காட்டினரிடமிருந்து பதில்கள் வந்து சேர்ந்தன என்றும் இக்கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## “திருஅவையில் சிறியோரின் பாதுகாப்பு” கூட்டத்தில் நிகழ்வன

மாசி 21ம் திகதி, வியாழன் முதல், 24 ஞாயிறு முடிய, வத்திக்கானில், உலகின் அனைத்து நாடுகளிலிருந்தும் வருகை தந்துள்ள ஆயர்கள், மற்றும், பல்வேறு பிரதிநிதிகள் பங்கேற்கும், “திருஅவையில் சிறியோரின் பாதுகாப்பு” என்ற முக்கிய கூட்டத்தின் அட்டவணையும், இக்கூட்டத்திற்குத் தேவையான பின்னணி விவரங்கள் அடங்கிய ஒரு குறிப்பேடும் மாசி

**மாசி 21, வியாழன்**

அன்று காலை, 9 மணிக்கு ஒரு செப வழிபாட்டுடன் தொடங்கிய முதல் அமர்வில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தொடக்க உரையாற்றியபின், “ஆடுகளின் மணம். அவர்களின் வேதனையை அறிந்து, அவர்கள் காயங்களை ஆற்றுவது, மேய்ப்பர்கள் பணியின் இதயம்” என்ற தலைப்பில், கர்தினால் Luis Antonio Tagle அவர்கள் முதல் உரையாற்றினார்.

“திருஅவை, போர்க்கள மருத்துவமனை. பொறுப்பை ஏற்பது” என்ற தலைப்பில், பேராயர் Charles Jude Scicluna அவர்கள், இரண்டாவது அமர்வில் வழங்கும் உரையைத் தொடர்ந்து, குழுக்களில் விவாதங்கள் நடைபெற்றன. பிற்பகலில் நடைபெற்ற மூன்றாவது அமர்வில், கர்தினால் Rubén Salazar Gómez அவர்கள், “இக்கட்டான தருணத்தில் திருஅவை - மோதல்களைச் சந்தித்து, உறுதியுடன் செயலாற்றுவது” என்ற தலைப்பில் வழங்கிய உரையைத் தொடர்ந்து, மீண்டும், குழுக்களில் விவாதங்கள் தொடர்ந்தன. மாலையில், பொது அமர்வில், குழு விவாதங்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின், சாட்சியங்களுடன் கூடிய மாலை செப வழிபாடு நிகழ்ந்தது. இத்துடன் முதல் நாள் நிகழ்வுகள் முடிவுக்கு வந்தன.

**மாசி 22, வெள்ளி**

வெள்ளியன்று, கர்தினால் Oswald Gracias அவர்கள் வழங்கும், “ஒருங்கிணைந்த நிலை: அனுப்பப்படுதல்”, கர்தினால் Blase Joseph Cupich அவர்கள் வழங்கும் “அனைவரும் இணைந்து பொறுப்பேற்றல்”, Linda Ghisoni என்ற முனைவர் வழங்கும் “இணைந்து செயலாற்றுதல்” என்ற மூன்று உரைகளும், குழு விவாதங்களும் நடைபெற்றன.

**மாசி 23, சனிக்கிழமை**

சனிக்கிழமையன்று, அருள்சகோதரி Veronica Openibo அவர்கள் வழங்கும் “திறந்த மனநிலை: உலகிற்கு அனுப்பப்படுதல்”, கர்தினால் Reinhard Marx அவர்கள் வழங்கும், “நம்பிக்கையாளர்கள் சமுதாயத்தில், ஒளிவு மறைவற்ற நிலை”, முனைவர் Valentina Alazraki அவர்கள் வழங்கும் “அனைத்து மக்களோடும் தொடர்பு” என்ற உரைகளும், குழு விவாதங்களும் நடைபெற்றன.

சனிக்கிழமை மாலை, 5.30 மணிக்கு, திருத்தந்தை உட்பட, இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் அனைவரும், பாவ மன்னிப்பு வழிபாட்டில் பங்கேற்கின்றனர்.

**பிப்ரவரி 24, ஞாயிறன்று** காலை, 9.30 மணிக்கு, இறுதித் திருப்பலியும், திருத்தந்தை வழங்கும் இறுதி உரையும் இந்தக் கூட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தன..

## சிறியோர் நீதி கேட்டு எழுப்பும் அழுகுரலைக் கேட்போமாக

திருஅவையின் உறுப்பினர்களால் உருவான பாலியல் முறைகேடுகள் என்ற காயத்தினால் பாதிக்கப்பட்ட சிறியோர், நீதி கேட்டு எழுப்பும் அழுகுரலைக் கேட்க, நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வியாழன் காலையில் வழங்கிய ஓர் அறிமுக உரையில் கூறினார்.

**திருத்தந்தையின் தொடக்க உரை**

“திருஅவையில் சிறியோரின் பாதுகாப்பு” என்ற தலைப்பில், தொடக்க உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையின் காயமாக விளங்கும் பாலியல் முறைகேடுகளைக் குறித்து கலந்துபேச கூடியிருக்கும் முதுபெரும் தந்தையர், கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், துறவு சபைத் தலைவர்கள் மற்றும் ஏனையப் பொறுப்பாளர்கள் அனைவரும், தூய ஆவியாரின் தூண்டுதலுக்கும், சிறியோரின் குரலுக்கும் செவிமடுக்குமாறு அழைப்பு விடுத்தார்.

**ஒளிவு மறைவற்ற, துணிவுள்ள பகிர்வுகள்**

நம்பிக்கையுடன் நாம் தொடங்கிய இந்த முயற்சியில், ஒளிவு மறைவு ஏதுமின்றி, துணிவுடன், நடைமுறைக்குத் தகுந்த உறுதியான முறையில் செயல்படவேண்டுமென திருத்தந்தை கேட்டுக்கொண்டார். உலகெங்கிலுமிருந்து ஆயர் பேரவைகள் அனுப்பிய ஆலோசனைகளில் கூறப்பட்டுள்ள அடிப்படை அளவுகோல்களை தங்கள் வழிகாட்டிகளாகப் பயன்படுத்தி சிந்திக்க, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவரிடமும் விண்ணப்பித்தார்.

**தயாரிப்பு முயற்சிகளை மேற்கொண்டவர்களுக்கு நன்றி**

இந்த முக்கியமான கூட்டத்தின் தயாரிப்பு முயற்சிகளை மேற்கொண்ட சிறியோரின் பாதுகாப்பு திருப்பீட அவை, விசுவாசக் கோட்பாட்டு பேராயம், மற்றும் இச்சந்திப்பினை ஒருங்கிணைக்கும் குழு அனைத்திற்கும் தன் நன்றியை வெளிப்படுத்திய திருத்தந்தை, தூய ஆவியார் மற்றும் அன்னை மரியா ஆகியோரின் துணையை வேண்டி, தன் உரையை நிறைவு செய்தார்.







“நாளை முதல் ஒரு சில நாள்கள், நாம் உரையாடல், ஒருங்கிணைப்பு, செவிமடுத்தல், தேர்ந்து தெளிதல் என்பனவற்றில் வாழவிருக்கிறோம். இது மனமாற்றத்தின் நேரமாக அமையட்டும். நாம், நம்மைப் பறைசாற்றாமல், நமக்காக உயிர் துறந்தவரை பறைசாற்றுகிறோம்”

“நம் வரலாற்றின் இருள்படர்ந்த நேரங்களில், ஆண்டவர் அருகில் இருக்கிறார், பாதைகளைத் திறக்கிறார், தளர்ச்சியுற்ற விசுவாசத்தை தட்டி எழுப்புகிறார், காயமடைந்த நம்பிக்கையை ஆற்றுகிறார், உறக்கநிலையிலுள்ள பிறரன்பை விழித்தெழச் செய்கிறார்”

“அனைவருக்கும் இயலக்கூடிய ஒரே ஒரு கலைப்பொருளை நாம் அனைவரும் நன்முறையில் உருவாக்கவேண்டும் என்று இயேசு நம்மிடம் கேட்கிறார். அதுவே நம் வாழ்வு”

“உண்மை, இறை தந்தையின் முகத்தைக் காட்டும் அற்புதமான வெளிப்பாடு. அது, அவரது அளவற்ற அன்பு”

“மற்றவர்கள், பிரச்சனைகளைக் காணும் இடங்களில், அன்பு செய்வோர், தங்கள் கற்பனையைப் பயன்படுத்தி, தீர்வுகளைக் கண்டுபிடிக்கின்றனர். பிறர் மீது அன்பு கொள்வோர், மற்றவர்களைக் குறித்து தாங்கள் கொண்டிருக்கும் முற்சார்பு எண்ணங்களின் அடிப்படையில் அல்லாமல், அவர்களது உண்மையான தேவைகளுக்கு, படைப்பாற்றலுடன் உதவி செய்கின்றனர்”

“இந்நாள்களில் தூய ஆவியார் நம்மைத் தாங்கி நிற்குமாறு அவரிடம் கேட்போம். அவ்வழியில், நாம் இன்னும் விழிப்புணர்வு பெறவும், தூய்மையாகவும், இந்தத் தீமையை மாற்றுவோம்”

“இறைவா, மற்றவரின் வேதனைகளை எங்கள் உள்ளங்களில் ஏற்கவிடாமல் தடுக்கிறோம். எங்கள் இதயங்களைத் திறந்து, அவற்றை உமது சாயலில் உருவாக்கியருளும்”

“கடவுளின் அன்பு எனும் ஒரே வல்லமையால் மட்டுமே, அனைத்தையும் புதியனவாக மாற்ற முடியும்”

“ஒவ்வொரு பாலியல் அத்துமீறல் நடவடிக்கையும் ஒரு பெரும் கொடுஞ்செயல் ஆகும். மக்களின் நியாயமான கோபத்தில், இறைவனின் கடுங்கோபத்தின் பிரதிபலிப்பை திருஅவை காண்கிறது. சப்தமில்லாத இந்த மௌன அழுகுரலுக்கு அக்கறையுடன் செவிமடுக்க வேண்டியது நம் கடமை”

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் [மத் 6:9]

பகுதி – 14

## பரிந்து மன்றாடுவோம்

செபத்தின் ஐந்து கூறுகளுள் ஒன்று வேண்டுதல் அல்லது மன்றாடுதல். தேவைகளை இறைவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதுதான் மன்றாட்டு. “நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்” (மத் 6: 8) என்று இயேசு மொழிந்திருந்தாலும் கூட, “அவரே நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” (மத் 6:9) என்று நமக்கு மன்றாடவும் கற்றுத் தந்துள்ளார்.

வேண்டுதல் என்பது இறைநம்பிக்கை, இறையன்பு என்னும் இரண்டு இறையியல் பின்புலங்களைக் கொண்டிருக்கிறது. வேண்டுதல் செய்பவர்கள் இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். “அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்?” (உரோ 10:14) எனக் கேள்வி எழுப்புகிறார் பவுலடியார். எனவே, நாம் மன்றாடும்போது இறைவன் மீது நமக்குள்ள நம்பிக்கையை அறிக்கையிடுகிறோம். ஆம், மன்றாட்டு என்பது ஒரு விசுவாச அறிக்கை.

இரண்டாவதாக, மன்றாட்டு என்பது இறைவனின் பேரன்பை, இரக்கத்தை அறிக்கையிடும் ஓர் இறைப்புகழ்ச்சி. விண்ணகத் தந்தை நன்மைகள் அருள்பவர் (மத் 7:11) என்பதை அறிக்கையிடுகிறோம். எனவே, மன்றாட்டு என்பது மதிப்பு, ஒரு செபக் கூறு. “கேளுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்” (மத் 7:7-8) என்றார் இறைமகன் இயேசு. அது மட்டுமல்ல, நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்” (யோவா 15:16) என வாக்குறுதி அளிக்கவும் செய்துள்ளார். அத்தோடு, “நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன்” (யோவா 14:14) என்றும் துணிவுடன் அறிவித்துள்ளார்.

எனவே, நாம் நம்பிக்கையுடன் இறைவனிடம் கேட்கலாம். மன்றாடலாம். இருப்பினும், இறைப்புகழ்ச்சியைப் போலவே, மன்றாட்டுகளிலும் ஒரு படிமுறை இருப்பதை மறந்துவிடலாகாது.

### 1. நமது அடிப்படைத் தேவைகளுக்காக மன்றாடல் :

உணவு, உடை, உறைவிடம் போன்றவை நமது அடிப்படைத் தேவைகள். இவையின்றி நம்மால் வாழமுடியாது. எனவே இவற்றுக்காக நாம் இறைவனிடம் வேண்டுவது நன்மையானதே. எனவேதான், இயேசுவும் தாம் கற்றுத் தந்த மன்றாட்டில், இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும் (மத் 6:11) என்று சொல்லித் தந்தார்.

அதுபோல, நோய் நீங்கி நலமோடு வாழ மன்றாடுவதையும் இயேசு ஊக்குவித்தார் என்பதை நற்செய்தி நூலின் பல பகுதிகளில் பார்க்கின்றோம் (லூக் 18:41-42). அன்புக்குரியவரே, நீர் ஆன்ம நலத்தோடிருப்பதுபோல் உடல் நலத்தோடு இருக்கவும் அனைத்தும் இனிதே நிகழவும் வேண்டுகிறேன் (யோவா 1:2) என்னும் மன்றாட்டிலும் இதை உணர்கிறோம்.

### 2. நமது மேலான தேவைகளுக்காக மன்றாடல் :

அடிப்படைத் தேவைகளுக்காக மட்டுமே இறைவனை மன்றாடாமல், அதைவிட மேலானவற்றை நாம் கண்டுகொள்ள வேண்டும் என அழைக்கின்றார் இயேசு. உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா? (லூக் 12:23). ஆதலால், எதை உண்பது, எதைக் குடிப்பது என நீங்கள தேடிக்கொண்டிருக்க வேண்டாம். கவலை கொண்டிருக்கவும் வேண்டாம். ஏனெனில், உலகு சார்ந்த பிற இனத்தவரே இவற்றையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவை தேவையென உங்கள் தந்தைக்குத் தெரியும். நீங்கள் அவருடைய ஆட்சியை நாடுங்கள். அப்பொழுது இவை உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் (லூக் 12:29-31) என்பது இயேசுவின் போதனை.

“அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார்” (யோவா 6:27) என்று இயேசு மொழிந்ததையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இள வயதில் அரசப் பொறுப்பேற்ற சாலமோன் மன்னன் இறைவனிடம் ஞானம் நிறைந்த உள்ளத்தை மன்றாடியபோது, அந்த வேண்டுதல் ஆண்டவருக்கு உகந்ததாய் இருந்தது என வாசிக்கின்றோம் (1 அர 3:9-10). எனவே, கடவுள் அவருக்கு ஞானமும், கூடவே செல்வத்தையும், புகழையும், நீண்ட ஆயுளையும் வழங்குவதாக வாக்களித்தார் (1அர 3:11-14).

அதுபோல, இயேசுவும் தூய ஆவி என்னும் கொடைக்காக மன்றாடத் தூண்டுகிறார். தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால், விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி (லூக் 11:13).

### 3. பிறராது தேவைகளுக்காக மன்றாடல் :

நமக்காக மன்றாடமல், பிறருக்காக மன்றாடுவது நமது வேண்டுதலை உயர்ந்த தளத்துக்கு இட்டுச் செல்கிறது. இயேசு தம் சீடர்களுக்காக, அவர்களின் பாதுகாப்புக்காக, ஒற்றுமைக்காக மனமுருகி மன்றாடியதை யோவான் நற்செய்தியின் 17ஆம் அதிகாரத்தில் பின்வருமாறு வாசிக்கின்றோம். “தூய தந்தையே, நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” (யோவா 17:11). தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன் (யோவா 17:15). எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! (யோவா 17:21).

தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் (மத் 9:38) என்னும் இயேசுவின் கூற்றில் இறையழைத்தலுக்காக மன்றாட வேண்டிய கடமையை உணர்கிறோம். இயேசுவின் இந்த எடுத்துக்காட்டைத் திருத்தூதர்களும், தொடக்கத் திருச்சபையினரும் பின்பற்றினர் என்பதைத் திருத்தூதர் பணிகள் நூல் மற்றும் பவுலடியாரின் மடல்களிலிருந்து அறிகிறோம்.

பேதுருவுக்காகத் திருச்சபை உருக்கமாக வேண்டியது (தி.ப 12:5). திமொத்தேயுவுக்காக பவுலடியார் இரவும் பகலும் மன்றாடினார் (2 திமொ 13) மேலும் பல்வேறு தேவைகளில் இருப்போருக்காக மன்றாடுவதையும் திருச்சபை ஒரு மரபாகக் கொண்டிருந்தது. அனைவருக்காகவும் மன்றாடுங்கள். இறைவனிடம் வேண்டுங்கள். பரிந்து பேசுங்கள். அரசர்களுக்காகவும், எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள் (1 திமொ 1:1-2) என்பது பவுலடியாரின் அறிவுரை.

### 4. நமது பகைவருக்காகவும் மன்றாடல் :

மன்றாட்டின் படிநிலையில் உச்சத்தில் இருப்பது நமது பகைவருக்காகவும் மன்றாடுவதுதான். உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 5:44) என்பது இயேசுவின் கட்டளை.

உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் (லூக் 6:28) என்று அறிவுறுத்திய இயேசு, அதன்படியே சிலுவையில் தொங்கியபோது, தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை (லூக் 23:34) என மன்றாடினார். அதனைப் பின்பற்றி மறைச்சாட்சியான புனித ஸ்தேவானும் உயிர் துறக்குமுன் ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும் (தி.ப 7:60) என முழந்தாள்படியிட்டு மன்றாடினார். இந்த உயர்ந்த மரபையே தொடக்கத் திருச்சபையினரும் பின்பற்றி வந்தனர். இன்றளவும் திருச்சபையின் திருப்புகழ் மாலையில் இந்த நான்கு வகை பரிந்துரை மன்றாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. இந்த மரபைப் பின்பற்றி நாமும் இந்த நான்கு வகைப் பரிந்துரை வேண்டுதல்களையும் நம் செப வாழ்வில் இணைத்துக் கொள்வோமாக!


---

## பாடசாலை வாழ்க்கை



பாலர் வகுப்பு முதல்
பல்கலைக்கழகம் வரை
பதின்ம வயதினூ
டாக -
பசுமை
நினைவுகளூடாக -
பயணிக்கும்
பள்ளி
மாணவப்பருவம் ,
துள்ளி மகிழும்
பருவம்,
துயர் தெரியாப்
பருவம்.
புதிய சிந்தனைகளோடு
புதிய ஆக்கங்களோடு
புதிய எதிர் காலத்தை
நோக்கி,
பாடம் படித்து
பரீட்சை எழுதி
புத்தகக்கல்வியுடன்
அனுபவக்கல்வியும்
பெற்று
புது வாழ்க்கை வாழ
வழிகாட்டும்
பள்ளி மாணவப்பருவம்
என்றும்
பசுமையான
வாழ்க்கைப்பருவம்.

**ஆக்கம்:**
**பென்ஜமின்**
**சோமநாதர்.**
**தெஹிவளை.**



# மறைசாட்சியான புனித பெஞ்சமின்

பெஞ்சமின் பாரசீக நாட்டில் பிறந்தவர். கிறிஸ்தவர்கள் அமைதியாக வாழ்ந்த காலம் அது. 450ஆம் ஆண்டில் அப்தாஸ் என்ற திருச்சபையின் ஆயர் பாரசீகர் வழிபட்ட அக்கினித் தேவதையின் கோவில் ஒன்றை தீக்கிரையாக்கிவிட்டார். இதனால் அரசர் முதலாம் இஸ்டேகோர்ட் கடும் சினம் கொண்டு "தீக்கிரையாக்கப்பட்ட அந்தக் கோவிலை ஆயர் மீண்டும் கட்டித் தர வேண்டும். இல்லையெனில், கிறிஸ்தவர்களின் ஆலயங்கள் அனைத்தும் அழிக்கப்படும்" எனச் சூளுரைத்தான். ஆயர் இடிந்தக் கோவிலைக் கட்டிக் கொடுக்க மறுத்ததால் கிறிஸ்தவ ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆயரும் கொல்லப்பட்டு மறைசாட்சியானார்.

கிறிஸ்தவ துன்புறுத்தல் ஆரம்பித்தது. 420ஆம் ஆண்டு அரசன் இறந்ததும் அவனது மகன் ஐந்தாம் வாரனேஸ் அரசனானான். தந்தையைப் போல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதை இவனும் தொடர்ந்தான். சுமார் நாற்பது ஆண்டு காலம் இந்தக் கொடிய கிறிஸ்தவத் துன்புறுத்தல் நீடித்தது. இவனது காலத்தில் துன்புறுத்தல் மிகவும் கொடூரமாகவும், சித்திரவதைகளாகவும் இருந்தன. துன்புறுத்தப்பட்டவர்களில் ஒருவர் திருத்தொண்டவர் பெஞ்சமின்.

கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாக இருந்து இவர் மெய்மறையைப் போதித்துக் கொண்டிருந்ததால் ஒரு வருடகாலம் இவரைச் சிறையில் அடைத்தார்கள். கிறிஸ்தவ மறையைப் பற்றிப் பேசக்கூடாது, போதிக்கக்கூடாது என்ற நிபந்தனை இவருக்கு விதிக்கப்பட்டது. கிழக்கத்திய உரோமப் பேரரசர் இரண்டாம் தியோடோசியஸ், தனது தூதுவர் ஒருவர் மூலம் இவருக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார்.

ஆனால், புனிதரோ "கிறிஸ்துவின் நற்செய்தியை பற்றிப் பேசுவது எனது கடமை. என்னால் மௌனமாக இருக்கமுடியாது. கடவுள் தந்த தலாந்தை மறைத்து வாழ்பவர்கள் மறு வாழ்வில் மிகக் கொடிய சித்திரவதைக்கு உள்ளாவர்" என்று கூறி மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் போதித்தார். இவரைப் பிடித்து கருணையற்ற வகையிலும், மிகவும் கொடிய வகையிலும் வதைத்தனர். இவரது கைகள் மற்றும் கால்களின் நகக் கண்களிலும், உடலின் மென்மையான பாகங்களிலும் கூரிய ஊசி போன்ற முட்களால் ஆழமாகக் குத்தப்பட்டார். பிறகு குத்தப்பட்ட ஊசி உருவப்பட்டது. மீண்டும். மீண்டும் இத்தகைய சித்திரவதை தொடர்ந்தது. இந்தக் கொடியச் சித்திரவதையை அமைதியுடன் பொறுத்துக்கொண்ட புனிதர், புன்னகைத்து அகமகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதனால் பெரிதும் சினமடைந்த அரசன்கூரிய கட்டையை புனிதரின் குடலுக்குள் செலுத்தி அவரை இரண்டாகக் கிழிக்கும் சித்திரவதையை மேற்கொண்டான். இக்கொடிய வேதனையைத் தாங்க இயலாத பெஞ்சமின் 424ஆம் ஆண்டில் மரணமடைந்து மறைசாட்சிகளுக்கான பொன் மகுடம் சூட்டப்பட்டார்.

"மக்களின் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும், விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்" (மத் 10:33) என்ற இயேசுவின் வார்த்தைகளை பெஞ்சமின் கருத்தாழமாக உணர்ந்து, தீவிரமாகத் தம் வாழ்வில் செயல்படுத்தினார். கிறிஸ்துவுக்காக நம் வாழ்வை இழக்க நாம் முன்வரவில்லை எனில் அவருடைய நிலையான அரசுக்கு நாம் உரிமையாளராக முடியாது என்று நமக்குப் புனித பெஞ்சமின் கற்றுத் தருகிறார்.

மறைசாட்சிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அஞ்சாமல் கிறிஸ்துவுக்காக விசுவாசத்தை அறிக்கையிடவும், புனித பெஞ்சமினைப்போல் மறை விரோதப் போராட்டங்களில் எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக இறுதிவரை விசுவாச உறுதியுடன் வாழ்ந்து, விண்ணக வாகையைப் பரிசாகப் பெறவும் இயேசுவிடம் வரம் கேட்போம்.







பல மருத்துவ குணங்களை உடைய பனங்கிழங்கு சாப்பிடுவதால் கிடைக்கும் பலன்கள்:

- குளிர்ச்சி தன்மை உடையது. மலச்சிக்கலைத் தீர்க்கக் கூடியது. உடலுக்கு வலு சேர்க்கும்
- பனங்கிழங்கை வேக வைத்து, சிறு சிறு துண்டாக நறுக்கி, காய வைத்து, அதனுடன், கருப்பட்டி சேர்த்து இடித்து மாவாக்கி சாப்பிட்டால், உடலுக்கு தேவையான இரும்புச் சத்து கிடைக்கும்
- பனங்கிழங்குடன், தேங்காய் பால் சேர்த்து சாப்பிட்டால், உடல் உறுப்புகள் பலம் பெறும். பெண்களின் கர்ப்பப்பை பலம் பெறும்
- பனங்கிழங்கு, வாயு தொல்லையுடையது. எனவே, இதை தவிர்க்க, பனங்கிழங்குடன், பூண்டு, மிளகு, உப்பு சேர்த்து இடித்து, மாவாக்கி சாப்பிடலாம். இனிப்பு தேவைப்படுவோர், கருப்பட்டி சேர்த்து இடித்து சாப்பிடலாம்
- நார்சத்து அதிகம் இருப்பதால், இதை உண்பதால், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
- வயிறு மற்றும் சிறுநீர் பாதிப்பு உள்ளோர், பனங்கிழங்கு மாவை, உணவில் சேர்த்து வந்தால், நல்ல பலன் கிடைக்கும். பனங்கிழங்கை அரைத்து மாவு செய்து, அதில் கஞ்சி அல்லது கூழ் செய்து காலையில் சாப்பிடலாம்
- பனங்கிழங்கில், பித்தம் அதிகமாகவே உள்ளது. எனவே, இதை சாப்பிட்ட பின், மிளகை கொஞ்சம் வாயில் போட்டு மென்றிட, உடலுக்கு வலு கிடைப்பதுடன், ஆரோக்கியம் உண்டாகும்.

# நீரிழிவு ஒரு குறைபாடே நோய் அல்ல...!




உலகளவில் இன்று நீரிழிவுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளனர். கலாச்சாரம், உணவுப் பழக்கம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், வாழ்க்கை முறை போன்ற காரணங்களால் டைப் 2 நீரிழிவுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முன்னெப்போதையும்விட தற்போது அதிகமாக உள்ளது.

குளுக்கோஸை நமது உடலின் அனைத்து செல்களுக்கும் இன்சுலின் எடுத்துச் செல்கிறது. இந்த இன்சுலினை வயிற்றின் பின்பகுதியில் உள்ள கணையம் சுரக்கிறது. இந்தக் கணையத்தின் செயல்பாடே நம் உடல் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைக்கிறது. இந்த இன்சுலின் சுரப்பில் உள்ள குறைபாடுகளே நீரிழிவு வருவதற்கான அடிப்படைக் காரணம்.

உடல் பருமனாலும் அதிக ரத்தக் கொழுப்பாலும் நீரிழிவு குறைபாடு ஏற்படுவதற்கு அதிக சாத்தியம் உண்டு. உடலின் எடை அதிகரிக்க அதிகரிக்க இன்சுலின் தேவையும் அதிகரிக்கும். இதனால் கணையம் அடிக்கடி இன்சுலின் சுரந்துக் களைத்துப் போய்விடும். இதன் காரணமாக உடல்பருமன் அதிகமுள்ளவர்களுக்கு நீரிழிவுக் குறைபாடு ஏற்படுகிறது.

உடல் திசுக்களில் தேவைக்கு அதிகமாகக் கொழுப்பு சேரும்போது இன்சுலினால் செல்களுக்குள் நுழைய முடியாது. அப்படியே சிரமப்பட்டு திசுக்களுக்குள் இன்சுலின் போனாலும் கொழுப்பு அடைத்துக்கொள்வதால் இன்சுலின் தனக்கான பணியைச் செய்ய முடியாது. இதனாலும் நீரிழிவு ஏற்படுகிறது. இவை தவிர, நீரிழிவுக் குறைபாடு பரம்பரையாகத் தொடர்வதற்கும் சாத்தியம் உண்டு.

### நீரிழிவின் வகைகள்

நீரிழிவுக் குறைபாடு டைப் 1, டைப் 2 என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. கணையத்திலிருந்து முற்றிலும் இன்சுலின் சுரக்காமல் இருப்பதால் ஏற்படும் குறைபாடு டைப் 1 நீரிழிவு. பொதுவாக, டைப் 1 நீரிழிவுக் குறைபாடு குழந்தைப் பிறப்பின்போது ஏற்படும். கணையத்திலிருந்து போதுமான அளவு இன்சுலின் சுரக்காமல் இருப்பதால் டைப் 2 நீரிழிவு ஏற்படுகிறது. மகப்பேறு காலத்தில் பெண்களுக்குக் கர்ப்பகால நீரிழிவுக் குறைபாடு ஏற்படும். இந்தக் குறைபாடு பெரும்பாலும் குழந்தைப் பிறப்புக்குப்பின் சரியாகிவிடும். இவை தவிர, LADA, MODY எனும் அரிதான நீரிழிவுக் குறைபாடுகளும் உள்ளன.

### பாதிப்புகள்

முறையான சிகிச்சை பெறாவிட்டால், நீரிழிவால் கண்கள், இதயம், சிறுநீரகம், பாதம் ஆகியவை விரைவில் பாதிப்படையும். நீரிழிவால், கண்களில் புரையும் கண் நீர் அழுத்தநோயும் (கிளாகோமா) ஏற்படுகின்றன. சிறுநீரகத்தில் உள்ள நெ.்ப்ரான் செல்கள் பாதிக்கப்பட்டு சிறுநீரகம் வழியாக புரதம் வெளியேறி சிறுநீரகப் பாதிப்பும் ஏற்படும். உலகளவில் சிறுநீரகப் பாதிப்புக்கு நீரிழிவுக் குறைபாடு முக்கியக் காரணியாக உள்ளது.

### எப்படித் தடுக்கலாம்?

பாதங்களின் உணர்வுத் தன்மையை அவ்வப்போது சோதிக்க வேண்டும், பாதத்தில் உணர்வுக் குறைபாட்டை உணர்ந்தால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். நீரிழிவுக் குறைபாடு உள்ளவர்கள் கண் பரிசோதனையையும் கண் ரெட்டினா பரிசோதனையையும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கட்டாயம் செய்துகொள்ள வேண்டும்.

ஏ.சி.ஆர் எனப்படும் சிறுநீரகப் பரிசோதனையில் கிரியாட்டின் அளவைத் தெரிந்துகொள்வது அவசியம். நீரிழிவுக் குறைபாடு உள்ளவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், உடலில் அதிக அளவு கொழுப்பு, புகைபிடிக்கும் பழக்கம் ஆகியவை இருந்தால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட சாத்தியம் உண்டு. எனவே, அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் கொழுப்பின் அளவைப் பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

### துன்பம் களைவோம்

உடலை முறையாகப் பராமரிப்பதே நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களின் முதல் கடமை. முறையான பரிசோதனைகளும் தொடர் சிகிச்சைகளும் நீரிழிவால் ஏற்படும் பாதிப்புகளை வெகுவாகக் குறைக்கும், நீரிழிவு என்றவுடனே வாழ்வில் இன்பம் எல்லாம் தொலைந்துவிட்டது எனக் கருத வேண்டாம். அதை நோய் என்று கருதாமல், ஒரு குறைபாடாகக் கருதி அதற்கு முறையான சிகிச்சைகள் மேற்கொண்டால் நீரிழிவின் அவதி விலகும்.

## 01 அன்பும், இரக்கமும்...

பங்கின் பக்திச் சபைகளின் பொறுப்பாளர்களினதும் முக்கியக் கடமையாகும். திருவருட் சாதனங்களைப் பெற்ற அனைத்துக் கத்தோலிக்கர்களும் இத்துாதுச் சேவைக்கு அழைப்பு பெற்றுள்ளனர். இந்தியாவின் கத்தோலிக்க சங்கத்தின் சர்வதேச அத்தியட்சகர் வண. அருட்பணி. தோமஸ் விஜய அடிகளார் விசேட விருந்தினராகக் கலந்துக் கொண்டார்கள். உயர் மறைமாவட்டத்தில் 130 பங்குகளில் உள்ள பக்திச் சபை பொறுப்பாளர்கள் 3000க்கும் அதிகமானோர் பங்குபற்றினர். அனேக பங்குத் தந்தையர்களும் பங்குபற்றியிருந்தனர். கத்தோலிக்க சங்கத்தின் தேசிய இயக்குனர் சிலாபம் மறைமாவட்டம் தலவிலை புனித ஸ்தலத்தின் பொறுப்பாதிகாரி அருட்பணி. லயிலி பர்னாந்து அவர்களுடன் மதிப்புக்குரிய அருட்பணி. செல்டன் டயஸ், அருட் பணி. பிரிலி முத்துக்குட ஆராச்சி, அருட் பணி. டெரன்ஸ் கித்சிறி பெரேரா ஆகியோரின் வழிநடத்துதலின் கீழ், கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை. பெசில் விக்ரமசிங்க அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## 01 இறைவனுடன்...

லூசியாள் மேற்றாசனத்தில் நடைபெற்று வந்தது. இவ்வருடம் நீர்கொழும்பில் நடத்தப்படுகிறது. லத்தின் பாடல் திருப்பலியை அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், கொழும்பு துணை ஆயர்கள் மெக்ஸ்வல் சில்வா, ஆண்டகை ஜே. டீ. அன்ரனி ஆண்டகை, சிலாபம் ஆயர் மேதகு வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். ஒஸ்ரேலியா, ஜேர்மன் நாடுகளைச் சேர்ந்த சர்வதேச இசைக் குழுவினர் இப்பாடல் திருப்பலியில் முக்கிய பங்கு வகித்ததுடன் நீர்கொழும்பு, கொழும்பிலுள்ள பாடசாலை, பங்குகளிலும் இருந்து 120க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றுனர். அத்துடன் அதிகமான அருட் தந்தையர்களும் அருட் சகோதர சகோதரிகளும் பொது மக்களும் கலந்து சிறப்பித்தது சிறப்பம்சமாகும்.

## 06 அகில உலக...

நடத்துனர். மூன்றாம் முறையாக அப்பெண் நடத்துனரிடம் சொன்னார். "நேரம் ஆக ஆக நானே கொடுத்த பணத்தை மறந்துவிடுவேன். எனவே, எனக்கு உடனே நாறபது ரூபாவைத் தந்துவிடுங்கள்" என்றார். மூன்றாம் முறையும் தன்னிடத்தில் அப்பெண் தனக்குச் சேரவேண்டிய காசைக் கேட்டதால் மிகவும் சலித்துப் போன நடத்துனர் அப்பெண்ணுக்குச் சேர வேண்டிய எல்லாப் பணத்தையும் மொத்தமாக அந்த நேரமே திரும்பத் தந்தார். நம் பெண்கள் அனைவருமே இப்பெண்ணைப் போல சுய முடிவுகள் எடுத்து அவைகளைச் சிறிதும் மனம் தளராமல் திரும்பத் திரும்பச் சொல்லும் போதும், செயல்படுத்தும் போதும் இன்றைய சமுதாயத்தை அவர்கள் விரும்பியபடி மாற்றியமைக்கலாம். அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பது போல, காலம் காலமாக பெண்களை ஒடுக்கி வைத்துள்ள சமய - சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலை அடித்து நகர்த்த ஆயிரக்கணக்கான பெண்கள் ஒருங்கிணைய வேண்டும். தொடர்ந்து போராட வேண்டும். வரவிருக்கும் இப்புதிய சமூகத்தைப் பற்றித்தான் திருத்தந்தை ஆறாம் பவுல் இரண்டாம் வத்திக்கான் சங்கத் தந்தையர்க்கு நிகழ்த்திய உரையில் இறைவாக்காகச் சொன்னார். "பெண் தன் அழைத்தலின்படி முழுமையாக வாழும் காலம் இதோ வந்து கொண்டிருக்கிறது. ஏன் ஏற்கனவே வந்து விட்டது. சமூகத்தில் என்றுமே பெற்றிராத செல்வாக்கையும் நிலையையும் அதிகாரத்தையும் பெண் அடையும் நாள் இதோ வந்துவிட்டது. இவ்வார்த்தைகள் முழுமையாக நிறைவேற பெண்களை உலகமெங்கும் வாழ்த்துவோம். அவர்கள் சமத்துவ உரிமை வாழ்வு பெற உடனுழைப்போம்.!

## 02 அருட்சகோதரி...

பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையின்போது அதற்கான ஆயத்தக்குழுவில் அங்கத்தவராகப் பணியாற்றினார். மட்டக்கலை, தெஹிவளை ஆகிய இடங்களில் குழுத் தலைவியாகவும் நிறைந்த சேவைகள் செய்தார். ஞானமும், விவேகமும், பற்றற்ற தன்மையும், உறுதியான செயற்றிறனும், விடாமுயற்சியும், கடின உழைப்பும், சரியானதை துணிவோடு சுட்டிக்காட்டும் வீரமும் இவரின் அணிகலன்கள். இறைவனைப் பிரிந்து தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதிலும், இறையருள் ஒன்றே தன் தஞ்சம் என்றும் இறுதிவரை வாழ்ந்தவர். எல்லோரையும் மதித்து உறவாடுவதிலும் குறிப்பாக ஏழைகள், கைவிடப்பட்டவர்களின் வாழ்வின் தரத்தை உயர்த்துவதிலும் மகிழ்வு கண்டவர். இறையன்பும் பிறரன்பும் பிரிக்க முடியாதவை என்பதை வாழ்ந்து காட்டியவர். ஏராளமான செல்வத்தையும், அன்பின் உறவுகளையும் விட்டு துறவறத்திற்குள் காலடி வைத்த எம் சகோதரி, தன் இறுதி மூச்சுவரை "ஏழ்மை" அர்ப்பணத்தை மகிழ்வோடு வாழ்ந்து, தரமான துறவற அர்ப்பணத்திற்கு வாழ்வின் அசைவுகளால் அர்த்தம் கொடுத்து எல்லோருக்கும் சாட்சியம் பகிரும் சகோதரியாக வாழ்ந்தவர். இயேசுவின் திருநாமத்தை எவ்வேளையிலும் உச்சரித்து தன் உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் தேற்றுபவர். திருப்பலி, திருச்செபமாலை, நற்கருணைச் சந்திப்பு, தனிக் குழுச் செபங்கள் என்ற ஆன்மீக செயற்பாடுகளுக்கு என்றும் பிரமாணிக்கமுள்ளவராக இருந்தவர். இவ்வாறான முன்மாதிரிகை நிறைந்த வாழ்வை எமக்கு விட்டுச் செல்லும் எம் சகோதரிக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். நசரேத்தின் திருக்குடும்பத்தின் எளிமையான வாழ்வையும், நிறுவுனரின் "இறைவனில் நாம் பாரிய குடும்பம்" என்ற ஐக்கியத்தின் அருங்கொடையையும், "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" எனும் ஆன்மீக தேடலையும், "இறைவனுக்குள் அனைத்தும் ஒன்றாகும்" இறைத்தந்தையின் மறைபொருளான திட்டத்தையும் கடந்த 81 ஆண்டுகள் வாழ்ந்து, உடலெனனும் கூடாரத்திற்கு விடைகொடுத்த அன்பின் சக்தியாம் இறைவனுக்குள் ஒன்றாகும். சகோதரியின் பரிந்துரை என்றும் எமக்கு இருக்கும் என்ற நம்பிக்கையின் எதிர்நோக்கோடு தொடர்ந்து செபிப்போம்.

## 07 விவிலிய வாசிப்பு

ஆண்டவருக்கும் இஸ்ரயேலுக்குமுரிய கடமையை நிறைவேற்றியவராவீர்கள், இந்த நாடும் ஆண்டவர் முன்னிலையில் உங்கள் உடைமையாகிவிடும் (எண் 32:21-22) மற்றும் மோசே அவர்களிடம், காத்துப் புதல்வரிலும் ரூபன் புதல்வரிலும் ஆண்டவர் முன்னிலையில் போரிடுவதற்குப் போர்க்கலந்தாங்கிய ஒவ்வொருவரும் உங்களோடு யோர்தானைக் கடந்து செல்வர். நாடு உங்களுக்கு முன் பணிந்தடங்கும், பின் நீங்கள் கிலயாது நாட்டை அவர்களுக்கு உடைமையாகக் கொடுக்க வேண்டும் (எண் 32:29). இந்த மேற்கோள்களின் படி பணிந்தடங்குதல், ஆற்றலுக்கு உட்படுத்துதல் என்றால் இறைவன் தாம் விரும்பும் இனத்தைக் குடியமர்த்துவதற்கு நிலம் தயாராய் இருக்கின்றது என்றே பொருள் கொள்ளவேண்டும். இதே கருத்தை யோசு 18:1, 1குறி 22:17-19, தொ.நூ 10:1-11:9 ஆகிய பகுதிகளிலும் காணலாம். தொ.நூ 10இல் குறிப்பாக நோவாவின் புதல்வர்களுக்கும் அவரின் வழிமரபினருக்கும் நாடுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆனால், அவர்கள் அதை விரும்பாமல் கோபுரம் கட்டி ஒன்றாக்க முற்பட்டபோது ஆண்டவர் அவர்களைச் சிதறடிப்பதை, அவரவர்களின் நிலங்களுக்கு அனுப்புவதைக் (தொ.நூ 11:1-9) காண்கிறோம். எனவே ஆற்றலுக்கு உட்படுத்துதல் என்றால் அதிகாரம் செலுத்துவது அழிப்பது என்பதல்ல பொருள். மாறாக ஆண்டவர் ஏற்படுத்தி அழகுபடுத்தி வாழ்வதற்கு ஏற்ப தயாராக்கி, கொடையெனக் கொடுக்கிற நிலத்தை உரிமையாக, உடைமையாக ஏற்றுக்கொண்டு அதிலே குடியமரவும், அதை இன்னும் அழகுடையதாக வளர்த்தெடுக்கவும், கட்டியெழுப்பவும் வேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

## 05 இலட்சியம்

உயரிய விருதுகளைப் பெற்றுக்கொடுத்தது. அவர் தமக்குள் மிக உயர்ந்த இலட்சியத்தை வகுத்து அதிலே இறுதிவரை உறுதியாக நின்றமையால் தாம் விரும்பிய புத்துலகம் படைத்தார். எண்ணத்தை விரிவுபடுத்தித் தன்னுடைய உலகத்தையே விரிவாக்கினார் மாவீரன் அலெக்சாண்டர். உலகை உள்ளங்கையில் வரைந்தார் இளவரசர். இது உன்னால் முடியும் என்றார் அவரது ஆசிரியர் அரிஸ்டாட்டில். மூன்றே ஆண்டுகளில் முயன்று ஜெயித்துக் காட்டினார். உலகையே தன் குடையினுள் கொண்டு வந்து புதிய சாதனை படைத்துக் காட்டினார். இரண்டாயிரம் ஆண்டளவாக வரலாறு அவரை நினைவில் வைத்திருக்கின்றது. எண்ணத்தை மாற்றினால் வாழ்வு மாறும். தாம் பணிபுரிந்த கன்னியர் சபை ஒழுங்குகள் தன்னைச் செயலிழக்கச் செய்வதாகக் கண்டார் அன்னை தெரேசா. எண்ணத்தை மாற்றினார். சபையை விட்டு வெளியேறினார். நற்கருணை ஆண்டவரிடம் பெற்ற உள்ளுணர்வுகளுக்கு வடிவம் கொடுத்தார். ஆண்டவரிடம் வறண்டு கிடந்த பாழ் உலகில் அன்பைப் பொழிந்தார். அகிலமே அவரை அன்னை என அழைக்கிறது. அன்னை தெரேசா இருக்கின்றார் எனவே கடவுள் இருக்கிறார் என மக்கள் சொல்லும் உலகைப் படைத்தார்.

உறுதியாக குறிக்கோளுடன் நிலைத்து நின்று புத்துலகம் படைத்தார் தென் ஆப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா. விடுதலை கீதம் இசைத்ததற்காக 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். சிப்பிக்குள் முத்து விளைவது போல் சிறை வாழ்வு சுதந்திர தாகத்தைத் தணிக்காமல் வேட்கையாக முதிர்ச்சியடையச் செய்தது. வெளியே வந்தார். சுதந்திரம் மலர்ந்தது. இத்தனை ஆண்டுகளாக மிகுந்த பொறுமையோடும் ஆனால் உறுதியோடும் காத்திருந்த மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்திருந்தார். ஐரோப்பாவின் கீழைய நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கை பரவியிருந்தது. இதை அகற்ற முடியும் என எவரும் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கனவு கண்டார். செபமாலை செபித்து இதை அடைவேன் என உறுதி பூண்டார். செபமாலைக்கே புதுப்பொருள் கொடுத்தார். அவர் விரும்பியவாறு பொதுவுடைமைக் கொள்ளை இல்லாத கீழைய நாடுகளை உருவாக்கினார். திருத்தந்தையுடைய இலட்சியக் கனவு நனவானது. எனவே வானகமே என் தாய் நாடு, அதை அடைந்தே தீருவோம் என முழக்கமிடுவோம். மண்ணில் இறையரசைக் கட்டி எழுப்புவோம். அதன் மதிப்பீடுகளை வாழ்வாக்குவோம்.




## மணமகன் தேவை

கொழும்பில் வசிக்கும் 25 வயதுடைய Software Engineer ஆக தொழில் புரியும் கத்தோலிக்க மகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு : 0702044914 (N5739)

உரோமன் கத்தோலிக்கம், கொழும்பில் வசிக்கும் 27 வயதுடைய 1991 தனியார் நிறுவனத்தில் Assistant Accountant ஆக தொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு : 0778782315 (N5979)

## புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு 13.

**2020ஆம் ஆண்டு – தரம் 01ற்கான விண்ணப்பப்படிவம்.**

- விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிகளில் வழங்கப்படும்.

- 2019 பங்குனி மாதம் 09ம் திகதி (சனிக்கிழமை) மு.ப 9.00 மணி முதல் ந.ப 12. 00 மணி வரை
- 2019 பங்குனி மாதம் 16ம் திகதி (சனிக்கிழமை) மு.ப 9.00 மணி முதல் ந.ப 12.00 மணி வரை

பின்வரும் சான்றிதழ்கள் அனைத்தையும் கையளிக்கும் பெற்றோர்களுக்கு மட்டுமே. விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும் என்பதை கவனத்திற்கொள்க.

- பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி) (2014.02.01 - 2015.01.31)
- பிள்ளையின் திருமுழுக்கு சான்றிதழ் (மூலப்பிரதி)
- திருச்சபையால் பெற்றோருக்கு வழங்கப்படும் திருமண சான்றிதழ் (மூலப்பிரதி)
- பங்குக் குடும்ப புத்தகம்
- பெற்றோரின் தேசிய அடையாள அட்டை
- வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.

**அதிபர், புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, கொழும்பு 13.**

## பணிப்பெண் தேவை

களனியில் வீடு ஒன்றில் தங்கி வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. வயது 40-60 இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சிங்களம் பேசக்கூடியவராக இருத்தல் வேண்டும். (N5943)

**தொடர்பு கொள்ள 0777481644, 0726017848**



வணக்கத்திற்குரிய ஆயர்கள், மதிப்பிற்குரிய அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் நண்பர்களுக்கு, கடந்த சில நாட்களாக விசேடமாக எனது அம்மாவின் இழப்பின் பின்னர் நீங்கள் எமக்கு வழங்கிய வழிகாட்டல்களுக்கும் ஒத்துழைப்பிற்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். நாம் தளர்ந்திருந்த வேளையில் உங்கள் செபமும் ஒத்துழைப்பும் எங்களை பலப்படுத்தியது. என் அம்மாவை நீங்கள் நேசித்ததற்கு நன்றி. இனிவரும் காலங்களிலும் எங்களுக்காக செபியுங்கள். எனது அம்மாவின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியடையட்டும்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

அன்பு மற்றும் செபங்களுடன் அருட்பணி. அந்தனி நிஷான் அடிகளார் மற்றும் குடும்பத்தினர். (Q18N8259)


## 10 விவிலியப் பகுதி விடைகள்

46. விண்ணரசு [5:3–10]
47. மரக்காலுக்குள் [5:15]
48. விளக்குத் தண்டின் மேல் [5:15]
49. கட்டளைகளை கடைப்பிடித்து கற்பிப்பவர் [5:19]
50. மறைநூல் அறிஞர், பரிசேயர் [5:20]
51. தண்டனைத் தீர்ப்புக்கு [5:21]
52. உறுப்புக்களில் ஒன்றை இழப்பது [5:29–30]
53. மணவிலக்கு சான்றிதழ் [5:31]
54. ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை [5:33]
55. விண்ணுலகு, மண்ணுலகு, எருசலேம், தலைமுடி [5:34–36]
56. விண்ணுலகு [5:34]
57. மண்ணுலகு [5:35]
58. எருசலேம் [5:35]
59. தீயோனிடமிருந்து [5:37]
60. கடன் வாங்க விரும்புகிறவர்களிடம் [5:42]

## 11 இன்று நான் உனக்கு...

நீ என்னிடமிருந்து
வந்தவன் நீ நல்லவன்.
எனது பார்வையில் நீ
மிகவும் மதிப்புக்குரியவன்.
அப்படியிருக்க நான்
ஒன்றுக்கும் உதவாதவன்
என்று நீ ஏன்
நினைக்கின்றாய்? நான்
ஒரு பாவி என்று ஏன்
நினைக்கின்றாய்?
நீ நல்லவன் உனது
கிண்ணம் கொடைகளால்
நிறைந்து வழிகின்றது!.
ஆனால் நீ சில
சமயங்களில் அவற்றைக்
கண்டு கொள்ளாமல்
போகிறாய்.
நான் உன்மேல்
அளவறிந்த கொடைகளையும் நன்மைகளையும்
ஆசீர்வாதங்களையும்
பொழிந்துள்ளேன்.
பெரும்
மகிமையை அடைய
உனக்குத் தேவையான
எல்லா நன்மைகளும்
உனக்குள்ளே உண்டு நீ
எனது மேலான படைப்பு.




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |




## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்